கோபால் & கோ.
GOPAL & CO
SUPER MARCHE
ஆசிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் தரமான பொருட்களும் மற்றும் பல தயாரிப்புக்களும் கிடைக்கும்
தரமான அங்காடி
புதிய அறிமுகம்
NOUVEAU CARTE SIM
ortel MOBILE




# தாய்நிலம்

களம் 01 | தடம் 12 | 08 - 14.08.2010 | இலவசப் பதிப்பு



நியூ ரூபி ஆபரண மாளிகை
நகைகளும், திருத்த வேலைகளும் உங்கள் தேவைகளுக்கு உடனுக்குடன் செய்து தரப்படும்.
NEW RUBY
ABARANA MAALIKAI
7, Rue Cail
75010 Paris
Tél: 01 42 05 18 05




# சூரியனில் திடீர் வெடிப்பு

## பூமியை நோக்கி விரைந்து வருகிறது
## சூரிய சுனாமி





சூரியனின் மேல்பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை அணுகுண்டு வெடிப்பது போல 2 தடவை மிகப்பெரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதில் முதல் வெடிப்பு பூமி உருண்டையின் அளவை விட பெரிய அளவில் இருந்துள்ளது. அடுத்து சில நிமிடம் கழித்து 2-வது வெடிப்பு ஏற்பட்டது. அது முதல் வெடிப்பை விட கொஞ்சம் சிறியதாக இருந்தது.

இதை அமெரிக்க நாசா விஞ்ஞானிகள் நவீன தொலைநோக்கி மூலம் படம்பிடித்து உள்ளனர். வெடிப்பு ஏற்பட்டபோது பயங்கர வெப்பம் கிளம்பி இருக்கிறது. அது பூமியை நோக்கி அதிவேகத்தில் விரைந்து வந்துகொண்

(தொடர்ச்சி 28-ம் பக்கம்)





தமிழ் இணையப் பரப்பில் புதிய வரவு
செய்திகள் | அரசியல் | ஆய்வு
விவாதம் | இலக்கியம் | சமூகம் | சினிமா
காலத்தின் பதிவாய்
இனத்தின் குரலாய்...

ponguthamil.com


www.thaynilam.com


23 வது ஆண்டை முன்னிட்டு


Renault Twingo 1.2
மோகன் ஜுவலரி மார்ட்
15.06.2010 முதல் 29.08.2010 மாலை 6.00 மணி வரை எமது தங்கநகை மாடத்தில் நகைகள் கொள்முதல் செய்யும் உங்கள் பெயர்கள் அதிர்ஷ்டக் கூப்பனில் பதியப்பட்டு குலுக்கல் பெட்டகத்துக்குள் சேர்க்கப்படும்.
29.08.2010 அன்று மாலை 7.00 மணிக்கு அதிர்ஷ்டக் குலுக்கல் நடைபெறும்.
201, Rue du Faubourg-Saint-Denis, 75010 PARIS.
M°: La Chapelle ou Gare du Nord Tél: 01 42 05 65 26 - Fax: 09 50 31 01 82



இனியொரு விதி செய்வோம் – அதை எந்நாளும் காப்போம்

www.tamilarangam.net



தாய்நிலம்

THAY NILAM

Journal Tamoul Hebdomadaire

Gratuit

158 - 160 Rue Diderot
93500 Pantin.

01 57 14 90 33

Rédacteur:
Siva Sinnapodi

Weekly Tamil Journal

Free Issue

தாய்நிலம்

இலவச வார வெளியீடு

e-mail: thaynilam@yahoo.com

www.thaynilam.com

Inscription encours

## வெலிகந்தை தடுப்பு முகாமில் உள்ள விடுதலைப்புலிப் போராளிகளை கொலை செய்ய முயற்சி

பொலன்னறுவை மாவட்டம் வெலிகந்த திருகோணமடு தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளில் 5 பேரைக் கொலைசெய்வதற்கு ஒரு முயற்சி நடந்ததாக சந்தேகிக்கப்படுகிறது.

தங்களது உறவினர்கள் வந்து தங்களைச் சந்திப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று இவர்கள் 5 பேரும் முகாம் பொறுப்பதிகாரியிடம் வாக்குவாதப்பட்டதாகவும், இதை அடுத்து இவர்கள் ஐந்து பேரும் மற்றவர்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் இன்று காலை இவர்கள் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொள்ள முயற்சித்துள்ளதாக செய்திகள் வெளியாகி யுள்ளன. இதேவேளை வெலிகந்தை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப் பட்டுள்ள போராளிகளில் சிறீலங்கா படைத் தரப்பால் தெரிவுசெய்யப்பட்ட சிலரையே நேற்று ஜே.வி.பி.யின் ஏற்பாட்டின் பேரில் அவர்களது உறவினர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

## மஹிந்தவின் சிங்கள குடியேற்றம் சண்டே லீடர் எச்சரித்துள்ளது

முறிகண்டியில் 12ஆயிரம் சிங்களவர்கள் குடியேற்றப்படும் இந்தத் திட்டமானது மீண்டும் ஓர் இனக் கலவரம் ஏற்படுவதற்கு அடித்தளம் இடுகின்றது என்று 'சண்டே லீடர்' எச்சரித்துள்ளது.

தெற்கில் தமிழர்கள் காணிகளை தமது சொந்தப் பணத்தில் வாங்கி குடியேறுகின்றனர். ஆனால் வடக்கில் சிறீலங்கா அரசு அவர்களின் காணிகளைப் பறித்து சிங்களவர்களைக் குடியேற்றுகின்றது.

முறிகண்டிப் பகுதியில் ஐந்தாயிரம் ஏக்கர் தமிழர் நிலம் பறிக்கப் பட்டு அங்கு 12 ஆயிரம் சிங்கள இராணுவக் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்படுகின்றன, என சண்டே லீடர் ஆங்கில ஏடு 'மஹிந்தவின் சிங்கள குடியேற்றம்' எனும் தலைப்பில் செய்தி வெளியிட்டுள்ளது.

12 ஆயிரம் இராணுவக் குடும்பங்களும் முறிகண்டியில் நிரந்தரமாக இருந்து பணியாற்றுவார்கள் - அத்துடன் அவர்களுக்கான சிங்களப் பாடசாலைகள் - மருத்துவமனைகள் - பௌத்த கோயில் மற்றும் பல பொதுச் சேவைகள் உட்பட வர்த்தக நிலையமும் அமைக்கப் படவுள்ளதாக அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குருநகர் அதிஉயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்பட்டுள்ளதாக சிறீலங்கா இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்

யாழ்ப்பாணம் குருநகர் அதி உயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்பட்டுள்ளதாக சிறீலங்கா இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட இந்தப் பிரதேசம் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கையின் ஓர் கட்டமாக இந்த அதிஉயர் பாதுகாப்பு வலய நீக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறீலங்கா இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவின் மேற்பார்வையில் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மஹிந்த சதுருசிங்கவினால் உயர் பாதுகாப்பு வலயம் அகற்றப் பட்டுள்ளது.

குருநகர்ப் பிரதேசம் கடந்த பதினைந்து ஆண்டுகளாக அதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்பட்டதாகவும், பொதுமக்களிடம் குறித்த பிரதேசம் ஒப்படைக்கப் பட்டதன் மூலம் 295 மீனவ குடும்பங்கள் நன்மை அடையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1995ம் ஆண்டு ரிவிரச இராணுவ நடவடிக்கைகளின் மூலம் யாழ்ப்பாணம் மீட்டெடுக்கப்பட்டதன் பின்னர் குருநகர்ப் பிரதேசம் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

## சிறீலங்கா அரசாங்கம் சமாதானத்தை ஏற்படுத்த தவறியுள்ளதென உலகத் தலைவர்கள் அதிருப்தி

சிறிலங்காவில் கடந்த ஆண்டு போர் முடிவுக்கு வந்ததையடுத்து அங்கு ஏற்பட்ட அமைதியினை தொடர்ந்தும் கட்டிக்காப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் தவறிவிட்டது என அனைத்துலக அரச தலைவர்களின் குழு குற்றம் சுமத்தியிருக்கிறது.

முன்னாள் தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவினால் உருவாக்கப்பட்ட அனைத்துலக ரீதியிலான இந்த அனைத்துலக அரச தலைவர்களின் குழு சிறிலங்கா நிலவரங்கள் தொடர்பில் மேலும் கூறியிருப்பதாவது.

கடந்த ஆண்டு சிறிலங்காவினது வடக்குப் பகுதியில் அரச படையினர் முன்னெடுத்த வலிந்த தாக்குதலைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட, சிறிலங்காவில் பல தசாப்தங்களாக தொடர்ந்த இனப்போர் முடிவுக்கு வந்தது.

போருக்குப் பின்னர் சிறிலங்கா அரசாங்கம் நடந்துகொள்ளும் முறைமை அனைத்துலக தேசக் கரிசனையினை ஏற்படுத்தியிருக்கிறது என ஐக்கிய நாடுகள் சபையினது முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனான், அமெரிக்காவின் முன்னாள் அரச தலைவர் ஜிம்மி காட்டர், தென்னாபிரிக்காவின் பேராயர் டெஸ்மன் ருற்று உள்ளிட்டோரை உள்ளடக்கிய இந்த 'மூத்தோர்கள்' கூறியிருக்கிறார்கள்.

'மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் அரசாங்கத்தினை எதிர்ப்பவர்கள் ஆகியோர் காணாமற்போவது மற்றும் அச்சுறுத்தப்படுவது என்பன உண்மையில் பயங்கரமானது' எனக் கூறிய டெஸ்மன் ருற்று அர்த்தமுள்ள இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதில் தொடர்புடையவர்கள் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட வேண்டும் என அழைப்புவிடுத்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் 8,000-க்கும் அதிகமான முன்னாள் போராளிகள் எந்தவித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாமல் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் போர்க்காலத்தில் நடைமுறையில் இருந்த அவசரகாலச் சட்டத்தினைச் சிறிலங்கா அரசாங்கம் இப்போதும் நடைமுறையில் வைத்திருப்பதாகவும் இந்த 'மூத்தோர்கள்' கூறுகிறார்கள்.

சிறுபான்மைத் தமிழர்கள் ஒதுக்கி ஓரங்கட்டப்பட்டமையே சிறிலங்காவில் இன மோதல் முளைவிட்டதன் பிரதான காரணம் எனக் கூறும் இந்தத் தலைவர்கள் மிக முக்கியமான இந்தப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை எனக் கூறுகிறார்கள்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்ட போரின் இறுதி மாதங்களில் நடந்தது என்ன என்பது தொடர்பில் விசாரணை நடாத்துவதோடு 'பொறுப்புச் சொல்லும் தன்மை' தொடர்பாக ஐ.நா. சபையின் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா அமைத்திருந்த வல்லுனர்கள் குழுவினை அண்மையில் சிறிலங்கா எதிர்த்திருந்தது.

ஐ.நாவின் வல்லுனர்கள் குழுவுக்கு ஒத்துழைப்பினை வழங்குமாறு அரசாங்கதினைக் கோரியிருக்கும் இந்த மூத்தோர்கள்,

சிறிலங்காவினது அமைச்சர்கள்

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)

## பிரான்ஸ் நாடுகடந்த அரசின் தேர்தல் முறைகேடு விசாரணைக் குழுவின் அறிக்கை கையளிப்பு

பிரான்சில் நாடுகடந்த அரசிற்கான பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற தேர்தலில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக திரு. நுவல்லாண்ட் தலைமையில் விசாரணைகளை நடத்திய விசாரணைக் குழு தனது 42 பக்க விசாரணை அறிக்கையை நாடுகடந்த அரசின் இடைக்கால முதன்மை நிறைவேற்றுனர் திரு. உருத்திரகுமாரனுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்த ஆணைக்குழு பிரான்சின் சட்டத்துக்கு அமைவாக தனது செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





குட்டக் குட்டத் தலைகுனிந்து அடிமைகளாக, அவமானத்துடன் வாழ்ந்த தமிழரைத் தலைநிமிர்த்தி தன்மானத்துடன் வாழவைத்த பெருமை எமது விடுதலை இயக்கத்தையே சாரும்.

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

# தாய்நிலம்

## கருத்தியல் வறுமையும் கருத்தியல் வெளியும்..

கருத்து என்பது முன்பு தனிமனிதர்களுடைய சிந்தனையிலேயே இருந்து. அந்தத் தனிமனிதர்கள் தமது நட்பு வட்டம் அல்லது உறவு வட்டத்துக்குள்ளேயே அதை பகிர்ந்து கொண்டார்கள். இந்தப் பகிர்தல் என்பதுகூட அந்தத் தனிமனிதர்களின் விருப்பு சார்ந்த வகையில் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது.

ஒரு தனிமனிதன் தன்னுடைய வீட்டுக்கு வெளியில் தனது நட்பு வட்டத்துக்குள் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை அல்லது அவர்களிடம் இருந்து தெரிந்து கொண்ட கருத்துக்களை தனது வீட்டுக்குள் எடுத்து வந்து தனது குடும்ப உறுப்பினர்களுடன் பகிர்வதென்பதுகூட அவனது விருப்பம் சார்ந்து மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே இருந்து. ஆனால் ஊடகங்களின் வருகையும் வளர்ச்சியும் கருத்தை கட்டமைப்பதிலும் அதை சமூகமயப்படுத்துவதிலும் ஒரு பெரும் பாய்ச்சலை உண்டாக்கி இருக்கின்றன.

இப்போது ஒருவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கருத்து என்பது அவரது வீட்டுக்குள், வானொலி, தொலைக்காட்சி என்று பல்வேறு வடிவங்களில் புகுந்து கொண்டு 'நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையத் தவிர வேறொன்றும் இல்லை. இதை நீ தெரிந்துகொள்' என்று அடம்பிடிக்கிறது.

இந்தக் கருத்தியல் ஆக்கிரமிப்பில் இருந்து, மனித நடமாட்டமே இல்லாத தனித் தீவில் வாழ்ந்த ரொபின்சன் குருசோ என்ற ஆங்கில நாவலின் நாயகன் போல யாரும் தங்களுக்குத் தாங்களே எல்லைகளைப் போட்டு தப்பித்து விட முடியாது.

இந்தக் கருத்தியல் ஆக்கிரமிப்பை இனங்கண்டு கொள்வதற்காகவே ஆய்வு, திறனாய்வு என்ற முறைகள் கொண்டுவரப்பட்டன. ஒரு சமூகப் பொறுப்புள்ள ஆய்வாளர் அல்லது திறனாய்வாளர் 'ஒரு கருத்து எந்த அடித்தளத்தில் வைத்து கட்டப்பட்டிருக்கிறது. அதை கட்டமைப்பதற்கு எந்த முறை கையாளப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்து ஒரு சமூகத் தளத்தில் 'அறிதல் - தெளிதல் - வினையாற்றல்' என்ற செயல்முறையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்' என்பது போன்ற பல்வேறு விடயங்களை கணக்கில் எடுத்து அதை கட்டுடைத்தே தனது ஆய்வை அல்லது திறனாய்வை முன்வைப்பார். ஒரு நல்ல திறனாய்வாளருக்கு பல்துறை சார்ந்த அறிவும் அதோடு கூட ஆழமான சமூகப் பார்வையும் அவசியம் என்ற நடைமுறை முன்பு ஒரு பொது வழக்காக இருந்தது.

ஆனால் இப்போது ஒரு கணனியும் அதில் தமிழ் எழுத்துருவும் இருந்தால் தாயகம், தேசியம், தேசிய நலன், எதிரி, துரோகி என்ற சொல்லாடல்களை வைத்து ஒரு ஆய்வை - திறனாய்வை செய்துவிடலாம் என்கிற அறியாமையும் இத்தகைய சொல்லாடல்கள் இருந்தால்தான் ஒரு ஆய்வு சிறந்த ஆய்வு அல்லது திறனாய்வு என்ற கருத்தியல் வறுமையும் நம்மவர்களைப் பீடித்திருக்கிறது.

கருத்தியலை கட்டமைப்பதில் ஊடறுக்கும் அல்லது ஊடுபாயும் முறை என்ற ஒன்றுள்ளது. இந்த முறை என்பது இரண்டு தரப்பு கருத்துக்களையும் சமாந்தரமான முறையில் கூறிச்சென்று ஒரு முக்கிய திருப்பத்தில் ஒரு தரப்பை நியாயப்படுத்தி மறுதரப்பை நிராகரிப்பதாகும். பொதுவாக இந்த முறை புலனாய்வு நடவடிக்கைகளுக்காக கையாளப்படுவதாகும். அதாவது எதிராளி மீது திட்டமிட்ட அவதூறுக் கருத்துக்களை அதை மக்கள் நம்பும் விதத்தில் பரப்புவதன் மூலம் எதிராளியையும் அவரது தரப்பையும் ஆத்திரப்படவைத்து அவர்கள் பதில் கருத்து எழுதும் அல்லது சொல்லும் நிலையை உருவாக்கி அதன் மூலம் தங்களுக்கு வேண்டிய தகவல்களை பெறுவதுடன் எதிராளியின் செயல் தளத்தை பிளவு படுத்துவதற்கு அல்லது முடக்குவதற்கும் இந்த முறை பயன்படுத்தப்படுகிறது.

சிறிலங்கா அரசும் அங்குள்ள பெரும்பாலான சிங்கள ஆங்கில ஊடகங்களும் இந்த முறையை கையாண்டே தமது செய்திகளை ஆய்வுகளை கட்டுரைகளை வெளியிடுகின்றன. இந்த ஊடகப் புலனாய்வு முறையை இங்கே புலத்தில் மறு உற்பத்தி செய்யும் ஆய்வாளர்கள் சிறீலங்கா அரசின் வேலையை சுலபமாக்குவதற்கு அவர்களை அறியாமலேயே துணை போகின்றார்கள்.

அண்மையில் விடுதலைப்புலிகளின் இயக்க மரபுக்கு மாறாக அவர்களது உறுப்பினர்கள் சிலரைப் பற்றி தகவல்கள், அறிக்கைகள், காணொளிகள் வடிவத்தில் ஊடகங்களில் கசியவிடப்பட்டன. தங்களுடைய எதிரிகளைக் கூட பொது எதிரிக்கு காட்டிக் கொடுக்காத உயரிய மரபு விடுதலைப்புலிகளுடையது. இந்த மரபைக் காப்பதற்காக எத்தனையோ போராளிகள் சயனைட் அருந்தி வீரச் சாவடைந்திருக்கிறார்கள். தனக்குப் பிடிக்காதவன் என்றால் கூட சக போராளி ஒருவன் களத்தில் விழுப்புண் அடைந்துவிட்டால் அவனை காப்பாற்றுவதற்காகச் சென்று தாங்கள் சாவைத்தழுவிய பல போராளிகளின் வரலாறு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருக்கிறது.

ஆனால் இன்று சகபோராளிகள் பற்றிய தகவல்களை எதிரி அறிந்து கொள்ளும் விதத்தில் எழுதுவதும் பரப்புவதும் சர்வ சாதாரணமாகி விட்டது.

இதற்கு அடிப்படை கருத்தியல் வறுமையும், தமிழ் கருத்தியல் தளம் ஆரோக்கிமான கருத்துக்கள் இன்றி வெறுமைப்பட்டு இருப்பதுமேயாகும்.

இதைச் சீர் செய்து தமிழ்த் தேசியக் கருத்தியல் தளத்தை செழுமைப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான திறந்த விவாதங்களும் வெளிப்படையான கருத்துப் பரிமாற்றங்களும் அவசியமாகும்.

## ஐ.நா நோக்கி உறுதி தளராது மனிதநேய நடைப்பயணம் மேற்கொள்ளும் சிவந்தன்







## வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

எமது சக்திக்கு மீறி ஏற்பட்ட சில தடங்கல்களால் கடந்த இரண்டு வாரங்களாக உங்கள் அபிமான பத்திரிகையான தாய்நிலத்தை எங்களால் வெளியிட முடியவில்லை என்பதை வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

எங்களுக்கு ஏற்பட்ட தடங்கல்களில் முக்கியமானது பொருளாதார ரீதியாக ஏற்பட்ட தடங்கலாகும்.

இந்த 'தாய்நிலம்' பத்திரிகையானது புலம்பெயர் சூழலில் கருத்தியல் செழுமையுள்ள தரமான பத்திரிகை ஒன்று வெளிவரவேண்டும் அது தாயகத்தை நேசிக்கும் மக்களுடைய பத்திரிகையாக இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடனேயே தனது பயணத்தை ஆரம்பித்திருக்கிறது.

நல்லுள்ளமும் தாயகப்பற்றும் கொண்ட வாசகர்கள் மற்றும் வணிகப்பெருமக்களின் உதவியுடனேயே இந்தப் பத்திரிகை வெளிவருகிறது.

இதுவரை வெளிவந்த 'தாய்நிலம்' பத்திரிகையின் பிரதிகளை படித்ததில் இருந்து இந்தப் பத்திரிகை ஒரு தரமான ஆரோக்கியமான பத்திரிகை என்ற எண்ணம் உங்கள் மனதில் தோன்றியிருந்தால் இந்தப் பத்திரிகை தொடர்ந்து வரவேண்டும் என்ற எண்ணப்பாடு உங்களுக்கு இருந்தால், அதற்கும் அப்பால் 'இந்தப் பத்திரிகை வெளிவர என்னால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும்' என்ற உயரிய உள்ளம் உங்களுக்கு இருந்தால் உங்களால் முடிந்த உதவியைச் செய்யுங்கள்.

தாய்நிலம் இணையத்திலுள்ள (www.thaynilam.com) PAYPAL கணக்கினூடாக நீங்கள் எங்களுக்கு உதவலாம்.

நன்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முன்னாள் போராளிகள் கட்டம் கட்டமாக விடுதலை செய்யப்படுவர் – சுதந்த ரணசிங்க

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் கட்டம் கட்டமாக விடுதலை செய்யப்படுவர் என சிறீலங்காவின் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. கிளர்ச்சியில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு ஐந்து ஆண்டு காலம் தேவைப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குறித்த கிளர்ச்சி ஓர் மரபு ரீதியான யுத்தமாக கருதப்பட முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் கிளர்ச்சியில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கே ஐந்து ஆண்டு காலம் தேவைப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எட்டாயிரம் முன்னாள் விடுதலைப் புலி போராளிகளையும் ஒரு மிக்க விடுதலை செய்து அனர்த்தங்களை எதிர்நோக்க தயாரில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள சகல சிறைக் கைதிகளையும் ஒரே நேரத்தில் விடுதலை செய்தால் என்ன நடக்கும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மூவாயிரம் விடுதலைப் புலி போராளிகளுக்கு அரசாங்கம் மறுவாழ்வு அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்கில் கடுமையான தடுப்பு முகாம்களில் 120000 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவை பற்றி எவரும் பேசுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் போராளிகளுக்கு கிரமமான முறையில் மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகவும் கட்டம் கட்டமாக அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நிபுணர் குழு அமர்வுகள் இரண்டு வாரங்களில் நடைபெறும்

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அமர்வுகள் இம்மாத முதல் இரண்டு வாரங்களில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிபுணர்கள் குழுவின் உத்தியோகபூர்வ அமர்வுகள் - ஆகஸ்ட் மாத முதல் இரண்டு வாரங்களில் நடைபெறவுள்ளது. 2009ஆம் ஆண்டு மே மாதம் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்தபோது மனித உரிமை மீறல்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையின் அடிப்படையில் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பொதுச் செயலாளரின் பேச்சாளர் சொன்ஹா சோய் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளின் போது இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அமர்வுகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் நிபுணர்கள் குழுவின் நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கமளிக்க முடியாதென அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு திரட்டும் நோக்கில் இலங்கை அதிகாரிகளுடன் பல்வேறு வழிகளில் தொடர்புகள் பேணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச ரீதியிலான நியமங்களுக்கு அமைவாக விசாரணைகள் நடத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நிபுணர்கள் குழுவின் விசாரணை அறிக்கையை இலங்கை அரசாங்கமும் எதிர்காலத்தில் பயன்படுத்திக்கொள்ள முடியும் எனவும் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை மீண்டும் அழைப்பது குறித்து பேச்சு

இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கை அகதிகளை மீண்டும் அழைப்பது குறித்துப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகளை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவது குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக இலங்கை மீள் குடியேற்ற அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

போர் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் மீள் குடியேற்றப்பட்ட பின்னர், இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள அகதிகள் மீள் குடியேற்றப்படுவார்கள் எனவும், வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை இன்னும் மூன்று வார காலத்திற்குள் மீள் குடியேற்ற முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து வரும் இலங்கை அகதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து மீண்டும் கையடக்கத் தொலைபேசிகள் மீட்பு

புனர்வாழ்வு நிலையங்களில் மீண்டும் கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தர்மபுரம் மற்றும் நெல்லுக்குளம் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள புனர்வாழ்வு முகாம்களிலிருந்து இவ்வாறு எட்டு கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் இந்த கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளின் ஊடாக புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சர்வதேச ரீதியான தொடர்புகளைப் பேணியிருக்கக் கூடுமென சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசிகளுக்கு மேலதிகமாக பற்றரிகள் சார்ஜர்கள் சிம் அட்டைகள் போன்றன மீட்கப்பட்டுள்ளன. இதேவேளை மருதமடு பிரதேசத்திலும் அண்மையில் 17 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.











தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


Quality Rice from
a Traditional Source.
20Kge
VEETEE
Discover The World's Finest Rices
10Kg e
22·05lb e
5Kg e
11·02lb
SUPREME
BASMATI
Veetee Supreme Basmati is sown and carefully nurtured in the foothills of the Himalayas.
A distinctive aromatic rice with its own exquisite flavour and delicate texture.
Veetee Rice Limited, Veetee House, Neptune Close, Medway City Estate, Rochester, Kent ME2 4LT.
Tel: 01634 290 092
VEETEE
Discover The World's Finest Rices
www.veetee.com

www.tamilarangam.net



# எரிகிறது காஷ்மீர் – உயிர் பலி தொடர்கிறது
# உமர் அரசை காப்பாற்ற காங். அதீத முயற்சி

இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் கலவரமும் வன்முறையும் கட்டுக்கடங்காமல் சென்றுகொண்டிருக்கிறது. கடந்த ஞாயிறு மட்டும் அரசபடையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் பலர் காயமடைந்திருக்கிறார்கள். காவல் நிலையம் ஒன்றும் அரச அலுவலகம் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 3 மாத காலமாக அங்கு நடந்து வரும் ஆர்ப்பாட்டங்களையும் மறியல் போராட்டங்களையும் தடுக்க முடியாமல் மாநில அரசு தடுமாறி வருகிறது. இதுவரை நடந்த கலவரங்களில் 30 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். கடந்த 5 நாட்களில் 18 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்

கடந்த ஞாயிறன்று பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டதால் ஆத்திரடைந்த மக்கள் காவல்நிலையத்துக்கு தீ வைத்ததில் அங்கே வைக்கப்பட்டிருருந்த வெடிபொருட்கள் வெடித்துச் சிதறி 4 பேர் இறந்தனர். 20-க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். தொடர்ந்தும் பாம்பூர், புல்வாமா பகுதியில் பதட்டம் நிலவி வருகிறது.

ஒருவர் கொல்லப்பட்டால் அதற்கு எதிராக நடக்கும் கண்டனப் போராட்டத்தில் 4 பேர் இறக்க நேரிடுகிறது. இந்த தொடர் சாவுகள் காஷ்மீர் நிலைமையை நாளுக்கு நாள் மோசமாக்கி வருகின்றன

அங்கு நடக்கும் இந்தப் போராட்டங்களை ஹரியத் மாநாடு கட்சியினரும் முப்தி மெகபூபாவின் தலைமையிலான (மக்கள் ஜனநாயகக் கட்சி) எதிர்கட்சியினரும் மறைமுக ஆதரவு அளித்து தூண்டி விடுகின்றனர் என்று ஆளும் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. பல மாவட்டங்களில் தொடர்ச்சியான ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்

காஷ்மீரில் இயல்பு நிலை திரும்புவதற்கு மக்கள் அமைதி காக்க வேண்டும் என மாநில முதல்வர் உமர் அப்துல்லா வேண்டுகோள் விடுத்துள்ளார். அரசு மட்டும் தனித்து அமைதியை ஏற்படுத்த முடியாது - அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். இதேவேளை இந்த வார முற்பகுதியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பாதுகாப்பு அமைச்சக குழுவினருடன் இந்தப் பிரச்சனை குறித்துஆலோசனை நடத்தினார். இதில் முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை.


















தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆடிப் பெருக்கு – காவிரிக் கரையோரம் உற்சாகக் கொண்டாட்டம்

காவிரிக் கரையோரத்தில் வசிக்கும் மக்கள் ஆடிப்பெருக்கு நாளை குடும்பத்தோடு கொண்டாடி மகிழ்ந்தனர்.

தமிழகத்தில் பொதுமக்கள் மிகவும் உற்சாகமாகக் கொண்டாடும் பண்டிகைகளில் ஆடிப்பெருக்கு விழாவும் ஒன்று. அதிகாலை நேரத்தில் எழுந்து குடும்ப சகிதமாக காவிரிக்குச் சென்று, அங்கு நல்லெண்ணெய் தேய்த்து நீராடுவார்கள்.

பின்பு தேங்காய், பழங்கள் வைத்தும், பெண்கள் தாங்கள் அணிந்துள்ள தாலி, தோடு, வளையல் போன்றவற்றை வைத்தும் சூடம் சாம்பிராணி காட்டி பயபக்தியோடு வணங்குவர்.

வளம் பெருக ஆண்கள் கையில் மஞ்சள் கயிறும், பெண்கள் தங்களது தாலிச்சரடில் புதிய மஞ்சள் கயிறும் கட்டிக் கொண்டனர்.

இது புதுமணத் தம்பதியருக்கான சிறப்பு விழாவும் கூட. புதுமணப்பெண்கள் தங்களது தாலிக் கயிறுகளை இன்று மாற்றிக் கொள்வார்கள்.

மேலும், 7 தினங்களுக்கு முன்பு 9 வகையான நவதானியங்களை மணல், மண், சாணம் ஆகியவற்றில் ஊற வைப்பர். அதை ஒவ்வொரு நாளும் நீர் விட்டு சிறுது நேரம் வெய்யிலில் வைத்து பாதுகாப்பார்கள். அது தற்போது தளதள என வளர்ந்து செழித்து இருந்தது. இதை முளைப்பாரி என்கின்றனர். இந்த முளைப்பாரியை அவர்கள் ஆற்றில் கரைத்து விட்டு வீட்டுக்குச் சென்றனர்.

இந்த விழாவை முன்னிட்டு காவிரி நதியோரம் நாள் முழுவதும் மக்கள் கூட்டம் அலை மோதியது.

திருச்சி அம்மா மண்டபத்தில் ஆடிப்பெருக்கையொட்டி மக்கள் கூட்டம் அலை மோதியது. அதே போல ஈரோட்டிலும் பவானி கூடுதுறை உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் ஆடிப்பெருக்கை விசேஷமாகக் கொண்டாடினர்



# கோமாவில் இருந்த சிறுமி உயிரை இசை காப்பாற்றியது

கேரள மாநிலம் ஆலப்புழையை சேர்ந்த் ராதிகா (வயது 6), என்ற சிறுமி கடந்த மே மாதம் ஒரு விபத்தில் கோமா நிலையில் விழுந்தார். அவரை ஆலப்புழை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். ஒரு மாதத்துக்கு மேலாக சிகிச்சை அளித்தும் கோமா நிலையில் இருந்து அவர் மீளவில்லை.

எனவே அவருக்கு சிகிச்சை அளித்து வந்த டாக்டர் கிரிஜா இசை தெரபி என்னும் மாற்று சிகிச்சை அளிக்க முடிவு செய்தார். ராதிகாவுக்கு தினமும் பிடித்தமான பாடலை 'ஹெட்போன்' மூலம் ஒலிக்க செய்தார். கர்நாடக இசையுடன் அமைந்த மெலோடி சினிமா பாடல்கள், ராதிகாவுக்கு மிகவும் பிடித்த 'கிருஷ்ணா' என்ற பாடல் ஆகியவற்றை அடிக்கடி காதில் கேட்க செய்தனர்.

இதற்கு நல்ல பலன் கிடைத்தது. இப்போது ராதிகாவுக்கு நினைவு திரும்பி இருக்கிறது. உயிர் பிழைப்பாரா? என்ற கேள்விக்குறியில் இருந்த அவர் இப்போது நல்ல நிலையில் தேறி இருக்கிறார்.

இது குறித்து கருத்தத் தெரிவித்த டாக்டர் கிரிஜா.

'ராதிகாவுக்கு பல்வேறு சிகிச்சை அளித்தும் பலன் கிடைக்கவில்லை. எனவே மாற்று சிகிச்சை செய்து முயற்சித்தேன். இதற்காக 'இன்டர் நெட்டில்' தகவல்களை சேகரித்தேன். அப்போது கோமா நிலையில் இருப்பவர்களுக்கு 'இசை தெரபி' சிகிச்சை அளித்தால் நரம்பு மண்டலங்கள் சீராகி நினைவு திரும்பும் என்று தகவல் இருந்தது. எனவே பிடித்தமான இசையை தொடர்ந்து கேட்கச் செய்தோம். இதில் மூளை நரம்பு சரியாகி கோமா நிலை நிவர்த்தி ஆகிவிட்டது' என்று கூறினார்.

# தடை செய்யப்பட்ட பவளப்பாறைகள் ராமர் கல் என கூறி விற்பனை

ராமேஸ்வரத்தில் மடம், சிறு கோயில்களில், தடை செய்யப்பட்ட பவளப்பாறைகளை, ராமர் கல் என கூறி 500, 1000 ரூபாய்க்கு விற்பனைசெய்வது தொடர்கிறது.

மன்னார் வளைகுடா மற்றும் பாக்குநீரிணைப் பகுதியில் பல வகைப் பவளப்பாறைகள் உள்ளன. கடலில் சாக்கடை, இரசாயனக் கழிவு வெட்டியெடுப்பது, தடை வலைகளை பயன்படுத்தி மீன் பிடிப்பது, பாசி வளர்ப்பது போன்ற காரணங்களால் அழிந்து வரும் பவளப்பாறைகளை பாதுகாக்க, அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது.

பவளப்பாறைகளை வெட்டியெடுப்பது, வைத்திருப்பது சட்ட விரோத செயலாக அறிவிக்கப்பட்டு தண்டனைகளும் வழங்கப்பட்டு வரும் நிலையில், இராமேஸ்வரம் பகுதியில் பவளப்பாறைகளை மிதக்கும் கல் என்றும், ராமர் பாலம் கல் என்றும் விற்பனை செய்வது அதிகரித்துள்ளது. பவளப்பாறைகளில் மிதக்கும் தன்மை கொண்ட பாறைகளும் உண்டு.

இந்தப் பவளப்பாறைகளை கடலுக்கு செல்லும் மீனவர்கள் எடுத்து வந்து, சில நூறு ரூபாய்களுக்கு விற்கின்றனர்.

இவற்றை இராமேஸ்வரத்தில் பல்வேறு மடங்கள் மற்றும் தனியார் கோயில்களில், சிறிய தொட்டியில் நீர் ஊற்றி மலர்களுடன் மிதக்கவிட்டு, 'இராமர் தொட்டதால் இக்கற்கள் நோய் தீர்க்கும் மருத்துவக்குணம் கொண்டவை' எனக் கூறி, பக்தர்களிடம் சிறிய கற்களுக்கு 500, 1000 ரூபாய் என, விற்பனை செய்கின்றனர். இதை விற்கும் பூசாரிகள், இதற்காக சிறப்பு மந்திரங்கள் சொல்லி பாறையின் மேல் குங்குமம் வைத்துத் தருவர். பயபக்தியுடன் வாங்கிச் செல்லும் பக்தர்கள் நோய் தீராமல் ஏமாந்து போவது தான் மிச்சம்

# காஷ்மீருக்கு முழு சுயாட்சியே தீர்வு



காஷ்மீர் பிரச்சனைக்கு இறுதித் தீர்வு அம்மாநிலத்திற்கு முழு சுயாட்சி வழங்குவதே என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் ஏ.பி.பரதன் கூறியுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழுக் கூட்டம் சிவகங்கையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய பரதன், போராட்டத்தில் ஈடுபடுவோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதை நிறுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

'ஒவ்வொரு நாளும் சூழ்நிலை மோசமாகிக்கொண்டே போகிறது. மூன்று நாட்களில் 9 பேர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகியுள்ளனர். காவல் துறையினரும், ஆயுதப்படையினரும் மக்கள் மீது தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தி வருகின்றனர். இதற்காக மாநில அரசை கலைத்திட வேண்டும் என்று நாங்கள் கோரவில்லை. காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வுகாண அனைத்துக் கட்சிகளுடனும் பேசுமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம். காஷ்மீர் பிரச்சனைக்கு இறுதித் தீர்வு அம்மாநிலத்திற்கு முழு சுயாட்சி வழங்குவதேயாகும். ஆனால் இறுதித் தீர்வு என்று வரும்போது, காஷ்மீர் ஒரு பகுதி பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பில் உள்ளது. எனவே பேச்சுவார்த்தை நடத்தும்போது இரு தரப்பையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்' என்று கூறியுள்ளார்.

# சோழ மன்னர்களுக்கு புகழ்பாடும் விழா

## – கருணாநிதி அறிவிப்பு

தஞ்சை பெரிய கோவில் கட்டப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் நிறைவடையும் நேரத்தில் சோழ மன்னர்களின் புகழ்பாட பிரம்மாண்ட விழா நடைபெற உள்ளதாக முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தஞ்சை பெரிய கோவில் கட்டப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைய இருப்பதை நினைவு கூர்ந்தார். பல மன்னர்களை வென்ற கங்கை கொண்ட சோழனை நினைவுகூர வேண்டும் என்று உலகத்தமிழ் - செம்மொழி மாநாட்டின்போது அறிஞர்கள் பலரும் தன்னிடம் கோரிக்கை வைத்ததாக கருணாநிதி குறிப்பிட்டார். அதனை ஏற்று, பெரிய கோவில் கட்டி ஆயிரம் ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் சோழ மன்னர்கள் புகழ்பாட, அரசு சார்பில் தஞ்சையில் பிரம்மாண்ட விழா எடுக்கப்படும் என்று தெரிவித்த அவர், வெறும் விழாவாக மட்டுமல்லாமல், தஞ்சை நகருக்கு தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுக்கும் விழாவாகவும் அமையும் என்றும் கூறினார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அனைத்துலக ஒழுங்கு என்பது அரசுகளுக்கு இடையேயான ஒழுங்காக உள்ளமையே நாம் எதிர்கொள்ளும் சவாலாகும்!

**நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இடைக்கால முதன்மை நிறைவேற்றுனர் உருத்திரகுமாரன் அவர்களுடனான செவ்வி**

**கேள்வி:** நாடுகடந்த அரசாங்கம் தனது முதலமர்வினை மேற்கொண்டதன் பிற்பாடு அதன் செயற்பாடுகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன?

**பதில்:** நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது முதலமர்வில் தனக்கான அரசியல் அமைப்பினை உருவாக்கிக்கொள்வதற்காகவும் உடனடியாக முன்னெடுக்கப்படவேண்டிய பணிகளை முன்னெடுப்பதற்காகவும் சில செயற்பாட்டுக்குழுக்களை அடையாளம் கண்டு உருவாக்கியிருந்தது.

அரசியல் அமைப்பு விவகாரக் குழு, அரசியல் அமைப்பு உபகுழு, கல்வி, பண்பாடு, உடல்நலம், விளையாட்டுத் துறைகளுக்கான குழு, பொருண்மிய நலன்பேணல் மேம்பாட்டுக்கான குழு, அனைத்துலக ஆதரவு திரட்டலுக்கான குழுவிற்கான புலமையாளர் உபகுழு, ஆதரவுதிரட்டல் உபகுழு, ஊடகங்கள் உபகுழு, இனஒழிப்பு, போர்க் குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் விசாரிப்பதற்கான குழு, பெண்கள், சிறுவர், மூத்தோர் நலன் பேணும் குழு, வர்த்தக மேம்பாட்டுக் குழு, மாவீரர்கள், போராளிகள் குடும்ப நலன் பேணும் குழு, போர்க்கைதிகளை விடுவிப்பதற்கான குழு, இயற்கை வளங்கள் மேம்பாட்டுக் குழு, இடம் பெயர்ந்தோர் ஏதிலிகள் பற்றிய குழு ஆகியவையே இக் குழுக்களாகும்.

நாம் அமைத்துள்ள குழுக்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஒவ்வொரு குழுவுக்கும் ஒருங்குகூட்டுனர் நியமிக்கப்பட்டு வேலைத்திட்டங்களுக்கான திட்டமிடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் குழுக்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளையும், தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய வேலைகள் தொடர்பான திட்டங்களையும் ஆராய்ந்து இக் குழுக்களுக்கென நியமிக்கப்படும் நிபுணர்குழுவின் ஆலோசனையுடன் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பர். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு, அரசாங்கம் தனது நிரந்தரக் கட்டமைப்புக்களை உருவாக்கும்போது இக் குழுக்கள் இக் கட்டமைப்புக்களோடு ஒருங்கிணைக்கப்படும்.

**கேள்வி:** இன்று தமிழீழத் தாயகத்தில் வாழும் மக்கள் குறிப்பாக வன்னி, தென்தமிழீழ மக்கள் பலத்த மனிதாபிமானச் சிக்கலை எதிர்கொள்கின்றனர். இதுவொரு அவசரமான கவனிப்பினை மேற்கொள்ளப்பட வேண்டிய சூழல். இந்த அவசர மனிதாபிமானச் சிக்கல் தங்களது செயற்பாடுகளில் முக்கிய இடத்தினை பிடித்துள்ளதா? இதனை எவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசு கையாளுகின்றது?



**பதில்:** இவ் விடயத்துக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். எனினும் எமது மக்களுக்கு நமது உதவிக் கரங்களை நேரடியாக நீட்டுவதில் சில நடைமுறைப் பிரச்சனைகள் தற்போது உள்ளன. சிறிலங்கா அரசு மக்களின் மனிதாபிமானப்பிரச்சனைகளையும் அரசியல் நோக்கம் கொண்டே அணுகுகிறது. இதனால் இவ் விடயத்தில் நாம் அவதானமாக இருப்பது முக்கியம். இவ் விடயத்தில் நாம் இரு முறைகளில் செயற்படுவதற்கான உத்திகளை வகுத்துள்ளோம்.

முதலாவது, சிறிலங்கா அரசுக்கு உதவி வழங்கும் நாடுகளையும் அனைத்துலக அமைப்புக்களையும் அணுகி, அவர்களின் உதவி எமது மக்களைச் சென்றடைவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

இரண்டாவது, அனைத்துலக உதவி வழங்கும் அமைப்புக்களுடன் இணைந்த வகையில் எமது உதவிகள் மக்களைச் சென்றடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா என்பதனை ஆராயந்து செயற்படல்.

நான் கடந்த வாரம் ஒரு அனைத்துலக அரசுசார அமைப்புடன் சந்திப்பொன்றினை மேற்கொண்டிருந்தேன். இச் சந்திப்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அனைத்துலக அரசு சாரா அமைப்புக்களுடன் ஒரு வகை பங்காளர் ஏற்பாட்டுக்கு வரும் பட்சத்தில் போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு உதவி வழங்குவதற்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துக்கு இது வாய்ப்பளிக்கும் என்ற கருத்து அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இருந்த போதும் நாம் அனைத்துலக அரசுசாரா அமைப்புக்கள் ஊடாக உதவ முற்பட்டாலும் அது சிறிலங்கா அரசின் திட்டங்களுக்கு ஏதோ ஒருவகையில் உதவுவதாக அமைந்துவிடக்கூடாது என்ற அக்கறை எமக்கு உண்டு. இதனால் இவ் விடயத்தில மிகவும் நன்றாக ஆராய்ந்து, எமது மக்களுக்கு உதவிகள் சென்றடையும் அதேவேளை அது சிறிலங்கா அரசின் திட்டங்களுக்கு உதவாத வகையில் அமையக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிவதில் நாம முனைப்பாக உள்ளோம்.

**கேள்வி:** போர் முடிவுற்ற காலகட்டத்தில் கைதாகிய, சரணடைந்த போராளிகள் தொடர்பான தெளிவான தகவல்கள் இன்றுவரை வெளியிடப்படவில்லை. சர்வதேச ரீதியாகவும் போராளிகள் தொடர்பான வலுவான குரல் இதுவரை எழுப்பப்படவில்லை. நாடுகடந்த அரசு இது தொடர்பாக எத்தகைய நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளது?

**பதில்:** போரின் போது சிறிலங்காப் படைகளால் கைதுசெய்யப்பட்டு அல்லது சரணடைந்து கொடும் சிறைக்கூடங்களுக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ள எமது போராளிகள் மூன்றாவது ஜெனிவாப் பிரகடனத்தின் அடிப்படையில் போர்க்கைதிகளாக மதிக்கப்பட்டு நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டும் என்பதே இவ் விடயத்தில் எமது நிலைப்பாடு.

மேலும், மூன்றாவது ஜெனிவாப் பிரகடனத்தின் 69, 70 ஆம் சரத்துக்களின் அடிப்படையில் சிறைக்குள் அடைக்கப்பட்டிருக்கும் போராளிகள் விபரங்கள் உடனடியாக வெளியிடப்படுவதற்கும், இவர்களது குடும்ப அங்கத்தவர்கள் இவர்களைச் சென்று பார்வையிடுவதற்கும் அனுமதி வழங்க வேண்டும். இருந்த போதும் சிறிலங்கா அரசு இவர்களைப் போர்க்கைதிகளாக கருதி, இவர்களுக்கு அனைத்துலக சட்டங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டிய ஏற்பாடுகள் எதனையும் செய்யவில்லை. அனைத்துலக செஞ்சிலுவைச்சங்கம் இவர்களைச் சென்று பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கவில்லை.

அண்மையில் அமைச்சர் குணசேகரா தனது நேர்காணலில் திரு. பாலகுமார், திரு. யோகி ஆகியோர் கொல்லப்பட்டுள்ளதாக உட்கிடக்கையாகக் கூறியுள்ளார். இது தமிழ் மக்களிடையே ஆழ்ந்த கவலையையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. திரு. பாலகுமார், திரு. யோகி ஆகியோர் உயிருடன் உள்ளனரா என்பதை அறிய வேண்டிய பொறுப்பு சர்வதேசத் தலைவர்களுக்கு உண்டு.

கைதிகளாக வைக்கப்பட்டுள்ள போராளிகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்படுதல், இவர்கள் உயிருடன் இருக்கின்றனரா அல்லது இல்லையா என்பதனை அறியாது தவிக்கும் குடும்பத்தினருக்கு ஒரு வகை ஆறுதலைத் தரும். அவர்களது பாதுகாப்பை ஓரளவுக்காவது உறுதிப்படுத்துவதற்கும் இது உதவும். இவ்விடயத்தினை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதப்பிள்ளை அவர்கள் தமது கூடுதல் கவனத்திற்கு எடுக்க வேண்டும் என நாம் வேண்டுகிறோம். இது தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினைப் பொறுத்தவரை நாம் இவ் விவகாரத்துக்காக ஒரு செயற்பாட்டுக்குழுவை அமைத்துள்ளோம். இவர்கள் இது தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்களுடன் செயற்பட்டு வருகின்றனர்.

**கேள்வி:** நாடு கடந்த அரசாங்கம் சர்வதேச சமூகத்துடன் தொடர்பாடல் முயற்சிகளை ஆரம்பித்துவிட்டதா? குறிப்பாக, அமெரிக்கா, இந்தியா போன்ற தரப்புக்களுடன் பேச்சுக்களுக்கான முயற்சி ஆரம்பமாகிவிட்டதா?

**பதில்:** நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உருவாக்கப்பட்டமை தொடர்பாக நாம் பல்வேறு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களுக்கு அறிவித்துள்ளோம். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் சில உறுப்பினர்கள் தாம் வாழும் நாடுகளின் அரச தலைவர்களையும் அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உருவாக்கப்பட்டமை குறித்தும் அதன் அரசியல் கொள்கைகளையும் எடுத்து விளக்கி வருகின்றனர்.

இதேவேளை, அரசாங்கங்களுடன் காத்திரமான உறவாடல்களை மேற்கொள்வதனை நாம் இன்னும் ஆரம்பிக்கவில்லை. எமது தேசியத் தலைவரின் வார்த்தைகளில் கூறுவதாயின் 'இராசதந்திர முன்னெடுப்புக்களின் வெற்றியை பலம் தீர்மானிக்கின்றது. பலத்திற்கு முன்னுரிமையும் வலுவான அந்தஸ்தும் உண்டு'. நண்பர்களோ அல்லது எதிரிகளோ உறவுமுறையினைத் தீர்மானிப்பதில் பலம் முக்கிய பாத்திரம் வகிக்கிறது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு வலிமையாக உருவாகும் போது அது நாடுகளுடன் காத்திரமான உறவுகளுக்கும் கலந்துரையாடல்களுக்கும் வழிகோலும்.

**கேள்வி:** நாடுகடந்த அரசாங்கம் மரபுவழி அரசாங்கங்கள் போன்று செயற்படுவதற்கான துறைகளை இனம்கண்டுள்ளதா? அரசாங்கத்தினை நிறுவனமயப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா?

**பதில்:** நாடு கடந்த தமிழீழ அர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாங்கம் ஒரு அரசாங்கம் போன்று இயங்கினாலும் இது மரபு சார்ந்த அரசாங்கங்களை விட அடிப்படையில் வேறுபாடானது. நாம் ஒரு நிலப்பரப்பை ஆளுகை செய்யவில்லை. சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல், வரி விதிப்பு போன்ற பணிகளும் இவ் அரசாங்கத்தின் செயற்படு எல்லைக்குள் உள்ளடங்கவில்லை. இதேவேளை, நாம் உருவாக்கியுள்ள செயற்குழுக்கள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டபின்னர் ஒரு அரசாங்கத்தின் அமைச்சுக்களைப் போல செயற்படுவதற்குள்ளன. அரசுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதைப்போல, நாமும் சட்டவாக்கம், நிறைவேற்றுகை என இரு வேறுபட்ட நிறுவனக் கட்டமைப்பைக் கெண்டதாகவே நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை உருவாக்கி வருகிறோம். ஒரு அரசாங்கத்தினைப்போல திறைசேரியினை உருவாக்கும் நடைமுறையினையும் நாம் ஆரம்பித்துள்ளோம்.

**கேள்வி:** புலம் பெயர்ந்து வாழும் தமிழ்மக்களுடனான நாடு கடந்த அரசின் தொடர்பாடல் முறைகள் என்ன? நாடுகள் வாரியாக அதற்கான நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளனவா?

**பதில்:** நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அடிப்படையான எண்ணக்கரு நாடு கடந்த நிலை என்பதேயாகும். இதனால் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நாடுகளின் எல்லைகளைக் கடந்தே தனது பணியை ஆற்றும். இருந்த போதும் இன்று தேச - அரசுகளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நாடுகளில் செயற்படுவதற்கு எமக்கு நாடுகள் சார்ந்தும் செயற்படுதளம் தேவை. நாம் அந்தரத்தில் தொங்க முடியாது. இந் நாடுகள் சார்ந்த செயற்படுதளம் அந்தந்த நாடுகளுக்கானவையாக மட்டும் இருந்துவிடவும் முடியாது. இவ்விடயத்தில நாம் ஒரு கவனமான சமநிலையைப் பேணவேண்டும்.

தற்போது நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அரசியல், பண்பாட்டு, விளையாட்டுத் தளங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் மக்களைச் சந்தித்து மக்களோடு கருத்துப்பரிமாறி வருகின்றனர். இதற்கான முறைசார் பொறிமுறை இன்னும் உருவாக்கப்படவில்லை. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு புதுமையான எண்ணக்கருவாக உள்ளமையாலும், தமிழர்களாகிய நாமே இதற்கு முன்னோடிகளாக உள்ளமையாலும் உரிய முறைசார் பொறிமுறைகளை உருவாக்கி முடிக்கச் சற்றுக் காலம் தேவைப்படும்.

**கேள்வி:** இன்று தாயகத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தெளிவாகவே கூட்டாட்சி அடிப்படையிலான பேச்சுக்களை சிறீலங்காவுடன் மேற்கொள்ள முனைகின்றது. புலம்பெயர்ந்து வாழும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகடந்த அரசு இந்த நிலைப்பாட்டினை எவ்வாறு பார்க்கின்றது?

**பதில்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தாயகத்தில் செயற்படும் அமைப்புக்களின் அரசியல் நிலைப்பாடுகளை மிகவும் கவனமாக அவதானித்து வருகிறோம். அக்கட்சிகளின் அரசியல் நிலைப்பாடுகள், தமிழீழ மக்களின் குறுங்கால தேவைகளை கவனத்தில் எடுக்கும் அதேவேளையில் நீண்டகால நலன்கள், பாதுகாப்பு, மேம்பாடு குறித்த கவனம் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதை அவர்களிடம் வலியுறுத்த விரும்புகின்றோம். பூரண அரசியல் அதிகாரம் இன்றி நாம் எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோ அல்லது மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ நடைமுறைச் சாத்தியமற்றது.

சுதந்திரத் தமிழீழ அரசு அமைவதே தமிழ் மக்கள் கௌரவமாகவும், பாதுகாப்பாகவும், மேம்பாடாகவும், தமது தனிமனித மற்றும் கூட்டு உரிமைகளைப் பெற்று வாழ்வதற்கான ஒரேவழி என்பதில் நாம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம். இந் நம்பிக்கை சமீப கால நிகழ்வுகளால் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சமத்துவம், கூட்டாட்சி போன்ற அடிப்படைகளில் தமிழ்த் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியினைத் தழுவிய வரலாற்றுப் பட்டறிவில் இருந்துதான் தமிழ் மக்கள் தமக்கெனத் தனியரசொன்றினை அமைக்கும் அரசியல் முடிவினை எடுத்தனர். தமிழீழத் தனியரசின் தேவைக்கான அடிப்படைக் காரணங்கள் இன்னும் அப்படியே உள்ளன. இன்னும் சொல்லப்போனால், தமிழர் தாயகப் பகுதியை விழுங்கி இனக்கபளீகரம் செய்யும் முயற்சியில் சிங்கள அரசு தீவிரமாக இறங்கியுள்ள இவ்வேளை எமக்கான தனிநாட்டுக்கான தேவை அனைவராலும் முன்னரைவிடப் பெரிதும் உணரப்படுகிறது.

ஆனால் அதன் சாத்தியப்பாடு குறித்த சந்தேகமே தற்போது எழுந்துள்ளது. நாம் நம்பிக்கையை இழக்காமல் எமக்கு சாதகமான மாற்றங்கள் உலகில் ஏற்படும் என்ற உறுதிப்பாட்டுடன் எமது போராட்டத்தைத் தொடர வேண்டும். தாயகத்தில் உள்ள தமிழ்த் தலைவர்கள் தனித் தமிழீழ அரசுக்காக செயற்பட முடியாத நிலை இருப்பதனை நாம் புரிந்து கொள்கிறோம். இதே நேரம் தமிழீழத் தனியரசுதான் எமது மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கு அடிப்படையானது என்ற தொலைநோக்கை அவர்கள் கைவிடக்கூடாது என நாம் அவர்களை வேண்டுகிறோம்.

**கேள்வி:** கைது செய்யப்பட்டு சிறையில் வாடும் போராளிகள் விடுதலை சார்பான முயற்சிகளை கேபி அவர்கள் சிறிலங்கா அரசுடன் பேசி மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வெளியாகின்றன. புலம்பெயர்ந்து வாழும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகடந்த அரசாங்கம் இந்த முயற்சியினை எவ்வாறு பார்க்கின்றது? அவருடன் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கு தொடர்புகள் ஏதாவது உள்ளனவா?

> **நான் முன்னர் பல தடவைகள் கூறியவாறு, கேபி அவர்கள் கைது செய்யப்பட்டதில் இருந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உருவாக்கும் முயற்சிக்கும் அவருக்கும் எந்த வகையான தொடர்புகளும் இருந்ததில்லை. இப்போதும் இல்லை. நாம் சுயாதீனமான குழுவாகவே நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்கும் முயற்சியினை மேற்கொண்டோம்.**

**பதில்:** கேபி அவர்கள் மலேசியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு சிறிலங்காவிடம் கையளிக்கப்பட்ட காலத்தில் இருந்து அவர் சிறிலங்கா அரசின் ஒரு கைதி. சிறிலங்காவில் தமிழர்கள் எவரும் கைதியாக இருந்து கொண்டு தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாட்டில் இயங்க முடியாது. கேபி அவர்களின் தற்போதய நிலையும் அப்படித்தான். மேலும், தற்போதுள்ள ஒரு சூழலில் அவர் சுயாதீனமானவராக இயங்குவதற்கான வாய்ப்புக்கள் அவருக்கு இருக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. இவரை சிறிலங்கா அரசு தனது திட்டங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய சூழல் இருப்பதனை நாம் கவனத்திற் கொண்டுள்ளோம்.

நான் முன்னர் பல தடவைகள் கூறியவாறு, கேபி அவர்கள் கைது செய்யப்பட்டதில் இருந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உருவாக்கும் முயற்சிக்கும் அவருக்கும் எந்த வகையான தொடர்புகளும் இருந்ததில்லை. இப்போதும் இல்லை. நாம் சுயாதீனமான குழுவாகவே நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்கும் முயற்சியினை மேற்கொண்டோம்.

இவரது கைதுக்கு முன்னரே, உருவாக்கற் குழுவின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு என்னைக் கேட்கப்பட்டபோதே பல நாடுகளில் உள்ள சட்டப்பிரச்சினைகள் காரணமாக, நான் அவரது கட்டுப்பாட்டிலோ அல்லது வழிகாட்டுதலிலோ செயற்படமுடியாது என்பதனைத் தெரிவித்து, அதில் உடன்பாடு காணப்பட்ட பின்னரே நான் அப்பொறுப்பை ஏற்றிருந்தேன்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு சுயாதீனமான அமைப்பு. அதன் கொள்கையும் நடைமுறையும் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையானவை.

**கேள்வி:** தத்துவார்த்தரீதியாக தமிழீழத்தினை சாத்தியமாக்க தாங்கள் வகுத்துள்ள காலஎல்லை எது?. வாய்ப்புக்கள் என்ன? சவால்கள் என்ன?

**பதில்:**தமிழீழத்தைச் சாத்தியமாக்குவதற்கான கால எல்லையினை முன்கூட்டியே தீர்மானிப்பது கடினமானது. அது உலகில் ஏற்படும் மாற்றங்களுடன் தொடர்புபட்டது. எனினும் வரலாற்றுப்போக்கினை ஆராய்ந்து பார்க்கும்போது தமிழீழம் சாத்தியமானது என்பதனையும் இரத்தம் சிந்தாத போராட்ட வழிமுறைகள் ஊடாக அதனை வென்றெடுக்க முடியும் என்பதனையும் உணர முடிகிறது.

நான் முன்னர் தெரிவித்திருந்தவாறு சுதந்திரத் தமிழீத்தின் உருவாக்கம் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் தென்னாசியாவிலும் ஏற்படும் புவிசார் அரசியல் மாற்றங்களுடன் தொடர்புபட்டுள்ளது. தமிழர்களின் அரசியல் நலன்களையும் தமிழீழ உருவாக்கத்தினை நிர்ணயம் செய்யக்கூடிய உலக சக்திகளின் நலன்களையும் ஒரே புள்ளியில் சந்திக்க வைக்கக்கூடிய நிலைமைகள் தோற்றம் பெறும் என்றே நாம் நம்புகிறோம். இலங்கைத்தீவு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. வல்லரசுகள் இப் பகுதியில் இலங்கைத்தீவினை மையமாக வைத்து தமது நகர்வுகளை மேற்கொள்கின்றன. இச் சூழல் எமக்கான வாய்ப்புக்களையும் கொண்டு வரக்கூடியது.

மேலும் இன்றைய உலகமயமாதல் சூழலில் சிறிய மற்றும் பலவீனமான அரசுகள் தனித்து உயிர் வாழ முடியாது. புறக்காரணிகள் இதில் முக்கிய பாத்திரம் வகிக்கும். புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் ஒன்றுபட்டு செயற்படுவதன் ஊடாக இப் புறக்காரணிகள் மீது தாக்கம் செலுத்தும் வாய்ப்பு உண்டு.

சிறிலங்கா அரசு மனித உரிமைகள் மற்றும் மனித உரிமைச் சட்டங்களை இழிவு செய்வது குறித்து அனைத்துலக சமூகத்தின் உணர்வுகளை நாம் இப்போது காண முடிகிறது. இது சிறிலங்கா அரசாங்கத்துக்கு எதிரான கண்டனங்களை அனைத்துலக அரங்கில் எழுப்பி வருகிறது. எனினும் அனைத்துலக அரசியல், நலன்களின் அச்சுக்களில் சுற்றுவது என்பதனை நாம் புரிந்திருக்கிறோம். இப் புரிதலுடன் செயற்பட்டு சிறிலங்கா அரசினை மேலும் அனைத்துலக அரங்கில் தனிமைப்படுத்துவதற்கு நாம் முயல வேண்டும்.

சிறிலங்கா அரசின் தமிழ் மக்களுக்கெதிரான இனப்படுகொலையினை அனைத்துலக அரங்கில் நன்கு வெளிப்படுத்தியும், உள்நாடுகளில் இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றும் புரிந்தவர்களுக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டும் சிறிலங்காவினை ஒரு காவாலி அரசாக நாம் அடையாளப்படுத்த வேண்டும்.

மேலும் இனப்படுகொலைக்குள்ளாகி வரும் தமிழ் மக்கள் சுயநிர்ணயத்தையும் சுதந்திரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு ஒரேவழி அவர்களுக்கான ஒரு நாடு அமைவதே என்பதால் அனைத்துலக சமூகம் அதற்கு தனது ஆதரவினை வழங்க வேண்டும் என்பதனை நீதித்தளத்திலும் அனைத்துலகச் சட்டத்தளத்திலும் முன்வைத்து நாம் செயற்படவேண்டும்.

இவற்றில் நாம் எதிர்கொள்ளும் சவால்கள் அனைத்துலக ஒழுங்கு என்பது நடைமுறையில் அரசுகளுக்கிடையிலான ஒழுங்காக இருப்பதில் இருந்துதான் எழுகின்றன. இவ் உலக ஒழுங்கில் சிறிலங்கா, ஒரு அரசாக இருக்கும் காரணத்தால் சில வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்கிறது. இருந்த போதும் நாமும் உலகில் இடம்பெற்று வரும் மாற்றங்களின் ஊடாக உலக அரசுகளின் துணையுடன் எமக்கான தனிநாட்டை உருவாக்கிக் கொள்ளும் காலம் வந்துதான் தீரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாடுகடந்த அரசாங்கத்தின் முன்னான முதலாவது மனு

## மக்களை அணிதிரட்டுங்கள் – விசாலமான அரசியலை முன்னிறுத்துங்கள்

நாடுகடந்த அரசாங்கம் எனும் வடிவம் மே-18-ற்குப் பிற்பட்ட காலத்து புலம்பெயர்ந்த தமிழர் அரசியலில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய செயற்திட்டமாகும். சிங்கள அரசினதும், அதனது முகவர்களாக புலத்தில் செயற்படுபவர்களினதும் கடும் எதிர்ப்புக்களை மீறி, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக நீண்டகாலம் உழைத்த செயற்பாட்டாளர்களின் உதவியுடன் இந்தப் புதிய வடிவம் பிரசவிக்கப்பட்டது.

தாயகத்தில் இயங்கிய நடைமுறை அரசு சிங்கள அரசினால் தோற்கடிக்கப்பட்டதன் பிற்பாடு, அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக கட்டப்பட்ட இந்த நாடுகடந்த அரசு தனக்கான கட்டமைப்புக்களை உருவாக்கும் முயற்சியிலும், தனக்கான வடிவத்தினை தீர்மானிக்கும் முயற்சிகளிலும் இறங்கியுள்ளது.

நடைமுறை ரீதியான நிர்வாக, நிதிச்சிக்கல்கள் இந்தக் கட்டமைக்கும் முயற்சிகளைப் பாதிக்கும் என்பதை உணருவது கடினமானதல்ல. குறிப்பாக, மே-18-ற்குப் பிற்பாடு ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் இயங்கிய புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் விடுதலைக்கான பண்பாடு சீரழிவுக்குட்படுத்தப்பட்டு தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்கின்ற சூழல் ஏற்படுத்தப்பட்டதன் பின்னணியில் நாடுகடந்த அரசாங்கம் எதிர்கொள்ளும் சிரமங்களை புரிந்துகொள்வது கடினம்.

ஆனால், இனம் எதிர்கொள்ளும் துன்பங்கள், ஆபத்துக்களின் அவசரத்தினை முன்னிறுத்திப் பார்க்கும் போதுதான் எதிர்நோக்கும் சிரமங்களை விரைவாகத் தாண்டிச் செல்லவேண்டிய பொறுப்பும், தேவையும் நாடுகடந்த அரசாங்கத்திற்கு உண்டு. அத்தகையதொரு எதிர்பார்ப்பு முழுப் புலம்பெயர்ந்த தமிழீழ தேசத்தவர்களுக்கும் உண்டு. அந்த அக்கறையுடன் இந்தப் பத்தி எழுதப்படுகின்றது.

இன்றுள்ள புறச்சூழலில் நாடுகடந்த அரசாங்கமானது இரு திசைகளில் தனது கரிசனைகளைச் செலுத்த வேண்டியுள்ளது.

முதலாவது, தாயகத்தில் மக்கள் எதிர்கொள்கின்ற உடனடியான மனிதாபிமான, மனிதஉரிமைகள் தொடர்புபட்ட விவகாரங்களில் செயற்படுவது. இரண்டாவது, நீண்டகால நலன்களை மையப்படுத்திய வியூகத்தின் அடிப்படையில் செயற்படுவது.

இவற்றில் ஒன்றை விட்டுக் கொடுத்து மற்றொன்றினை முன்னெடுக்கும் வாய்ப்பு நாடுகடந்த அரசாங்கத்திற்குக் கிடையாது. ஏனெனில், உடடினடித் தேவைகளை கவனத்தில் எடுக்காது நீண்டகால வியூகத்தினை வகுப்பது என்கின்ற அடிப்படையில் செயற்பட்டால், இந்த அரசுக்கான மையமாகத் திகழும் மக்களும், தேசியம் பற்றிய பிரக்ஞையும் இழக்கப்படும் சூழல் ஏற்படும். சிறீலங்கா அரசு உடனடி அவலங்களை தனது அரசியலுக்குப் பயன்படுத்துகின்றது. இந்தியா எமது மக்களின் அவலங்களை தனது அரசியலுக்குப் பயன்படுத்துகின்றது. மேற்குலகும் கூட மக்களின் அவலங்கள் மீதான தனது அரசியலை முன்னிறுத்துகின்றது. இந்தச் சூழலில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் பிரதிநிதித்துவமாக திகழும் நாடுகடந்த அரசு மட்டும் எவ்வாறு தனது மையசக்தியான மக்களை கவனிக்காது நீண்டகால வியூகதத்தில் இயங்க முடியும்?

மறுமுனையில் நீண்டகால நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியலை விட்டுவிட்டு உடனடித் தேவைகள் என்கின்ற வட்டத்திற்குள்ளும் நாடுகடந்த அரசு நிற்கமுடியாது. ஏனெனில், உடனடித்தேவைகள் என்பது சிங்கள அரசினால் உருவாக்கப்பட்டு நீடிக்கப்படும் ஒரு பொறி.

> புலம்பெயர்ந்த மக்கள்தான் நாடுகடந்த அரசாங்கம் எனும் புதிய வடிவத்தின் அடிப்படை வலு. அவர்களை முறையாக - அரசியல் விழிப்புணர்வுடன் அணிதிரட்டும் பணியினை மக்கள் பிரதிநிதிகளாக தேர்வுசெய்யப்பட்டவர்கள் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். இதுவொரு சனநாயக பிரதிநிதித்துவம் சார்ந்த செயற்பாடு என்பதால் விழிப்பும், கருத்துமே மக்களை ஒன்றுபடுத்தும்.

மக்களை அவலநிலைக்குள் வைத்திருந்தவாறு அரசியல் உரிமைகள் என்பதை கரைத்து அழிக்கும் மரபுவழிப்பட்ட நடவடிக்கைகளை சிறீலங்கா செய்யும் என்பதை ஊகிப்பதற்கு பெரிய ஞானம் தேவைப்படாது. நாடுகடந்த அரசாங்கமும் இந்த உடடினத்தேவைகள் என்ற பொறிக்குள் தன்னை அகப்படுத்தி நீண்டகால நோக்கமான தமிழீழத் தனியரசை உருவாக்குவது எனும் கனவை புதையுண்டு போக அனுமதிக்கமுடியாது.

இந்தப் பின்னணியில், நாடுகடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் மக்களை அணிதிரட்டல் எனும் முக்கிய அரசியல் செயற்பாட்டிலிருந்து ஆரம்பிப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

மக்களை அணிதிரட்டல் என்பது மக்கள் தமது உறவுகளின் உடனடித் தேவைகள் பற்றிய உணர்வு கொண்டவர்களாக இருக்கும் அதே வேளையில் நீண்டகால இலட்சியத்தினை காவிச்செல்லும் சக்தியாக மக்களை அரசியல் மயப்படுத்தல் என்பதை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

புலம்பெயர்ந்த மக்கள்தான் நாடுகடந்த அரசாங்கம் எனும் புதிய வடிவத்தின் அடிப்படை வலு. அவர்களை முறையாக - அரசியல் விழிப்புணர்வுடன் அணிதிரட்டும் பணியினை மக்கள் பிரதிநிதிகளாக தேர்வுசெய்யப்பட்டவர்கள் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். இதுவொரு சனநாயக பிரதிநிதித்துவம் சார்ந்த செயற்பாடு என்பதால் விழிப்பும், கருத்துமே மக்களை ஒன்றுபடுத்தும். அந்த விழிப்பும், கருத்தும் மக்களை சென்றடையாது, வெறும் வார்த்தைகளாக குறுகிவிட்டால் 'தமிழீழத்தில் சந்திப்போம்' என்று நீங்கள் சொல்லும் வார்த்தை வலுவிழந்ததாகிவிடும்.

மக்களை அணிதிரட்டுவதற்கான முதலாவது கூறு மக்களுடன் உரையாடுவது, மக்கள் சொல்வதைக் கேட்பது, மக்களின் கரிசனைகளுக்கு பதிலளிப்பது என்று ஆரம்பிக்கின்றது. ஆயுதப்போர் மையமாக இருந்த சுமார் மூன்று தசாப்த காலத்தில், இயக்கத்தின் நாடு சார்ந்த செயற்பாட்டாளர் வீடுகள் தோறும் சென்று அரசியல் பேசினார்கள் - பங்களிப்புக்களைத் திரட்டினார்கள் - தாம் செயற்படும் மக்களிற்கான கட்டமைப்புக்களை (கல்வி முதல் பண்பாடு வரைப்பட்ட) நிறுவினார்கள். அந்த அணிதிரட்டல் வலுவான ஆதரவுத்தளத்தினை ஆயுதம்தரித்த விடுதலைப் போரிற்கு கொடுத்தது. அந்தத் தளம் இப்போது உங்களுக்கானது. மக்களிடம் செல்லுங்கள்.

மறுபுறம், புலத்தின் வளங்களை ஒன்றுதிரட்டும் நுட்பமான திட்டங்களை ஆரம்பியுங்கள். மனித வளங்களை, அறிவுவளங்களை, ஆதரவு வளங்களை உங்கள் ஆளுமையின் கீழ் கொண்டுவரும் தலைமைத்துவப் பண்பை வெளிப்படுத்துங்கள்.

பிற அரசாங்கங்களுடன் பேசுவதையும், உறவாடுவதையும் இராஜதந்திர செயற்பாடாக வகுத்துக் கொள்ளுங்கள். எங்கள் அரசாங்கம் (நாடு கடந்த அரசாங்கமாக இருந்த போதும்) மற்றுமொரு அரசசார்பற்ற நிறுவனங்களின் மனோநிலையுடன் இயங்க முடியாது. அது மக்கள் வலுவின் அடிப்படையில் கட்டப்பட்ட வலுவான நிறுவனமாகும். எனவே, பிற அரசுகளுடன் அது ஈழத்தில் மக்கள் படும் துன்பங்களை மட்டும் பேச முடியாது அது தென்னாசிய பிராந்தியத்தின் புவிசார் அரசியல் பற்றிப் பேச வேண்டும். குறித்த அரசின் நலன்களுடன் எங்கள் நலன்கள் பொருந்திப்போகும் பொதுப்புள்ளிகள் பற்றிப் பேசவேண்டும். பகிரங்கமானதும், பகிரங்கமற்றதும் எனப் பலவழி இராஜதந்திரங்களை முன்னிறுத்தல் வேண்டும்.

கவனம், இன்னும் மூன்று ஆண்டுகளில் நீங்கள் மீண்டும் எங்கள் மத்தியில் தேர்வுக்காக வரப்போகின்றீர்கள். எனவே, நாங்கள் தந்த ஆணையை, அல்லது நீங்கள் கொடுத்த வாக்குறுதியினை காப்பாற்றிவிட்டு வாருங்கள்.

– நாதன்









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# THE KID

## சார்ளி சாப்ளினின் கலைகளுக்கான ஒரு கலை




படம் : த கிட்
வருடம்: 1921
நடிகர்கள்: சாப்ளின், எட்னா, ஜாக்கி கூகன் (சிறுவன்)
இயக்கம்: சாப்ளின்.
நேரம் : 60 நிமிடங்கள்.
தயாரிப்பு : பர்ஸ்ட் நேஷனல் கார்ப்பெரேஷன்.
சாப்ளின் கதாபத்திரம்: வழிப்போக்கன், வளர்ப்பு தந்தை.

'த கிட்' சாப்ளின் வாழ்க்கையில் மிக முக்கியமான திரைப் படம். காரணம், இதுதான் சாப்ளின் முதலில் எடுத்த முழு நீளத் திரைப்படம் (ஒரு மணி நேரம்). சாப்ளின் தன் முதல் திருமணத்தால் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தையும், தன் முதல் குழந்தையின் இறப்பைப் பற்றிய நினைவையும் மறக்க உதவியாக இருந்தது 'த கிட்'. இந்த முறை சாப்ளின் தேர்ந்தெடுத்த களமும் ஒரு தந்தைக்கும், மகனுக்குமான பாசத்தை பற்றியது. இந்தப் படத்தின் மூலம் சாப்ளின் நினைத்த மாத்திரத்தில் ரசிகர்களை சிரிக்க வைக்கவும், அழ வைக்கவும் முடியும் என்பதை நிரூபித்தார்.

கதைச் சுருக்கம்:

எட்னா, தன்னால் வளர்க்க முடியாமல், தனக்கு முறை யற்றுப் பிறந்த குழந்தையை குப்பைத் தொட்டியில் போடு கிறாள். சம்பந்தமே இல்லாமல் நாடோடியான சாப்ளினிடம் அந்தக் குழந்தை கிடைக்கிறது. ஐந்து வருடங்கள் கழித்து அந்தச் சிறுவனுக்கும், சாப்ளினுக்குமான உறவு வளருகிறது. அந்தச் சிறுவன் சாப்ளினின் குழந்தை இல்லை என்பதை அறிந்து அதை அவரிடமிருந்து பிரிக்க முயற்சிக்க, சாப்ளின் அந்தச் சிறுவனை மீட்டாரா? என்பதுதான் மீதிக் கதை.

முழு நீளத் திரைப்படம்:

இந்தப் படத்தை பற்றி எழுதுவது சாதாரணமானதல்ல, இன்றளவும் உலக சினிமா வரலாற்றில் ஒரு குறிப்பிடும் படியான படமாக இந்தப் படம் உள்ளது. திரைக்கதையில் தொடங்கி படமாக்குதல், நடிப்பு, இசை என அனைத்துத் துறைகளிலும் இந்தப் படம் ஒரு பாடமாக இருப்பது இந்தப் படத்தின் சிறப்பு. சாப்ளினின் சிறப்பும்தான்.

இந்தப் படத்தின் பல காட்சிகளில் 'மாண்டேஜ்' என்றப்படும் ஒரு யுக்தியை சாப்ளின் அப்பொழுதே முயற்சி செய்திருந்தார். இருந்தாலும் முழுமையான மாண்டேஜ் முறையை பின் னாட்களில் ஐன்ஸ்டையின் சினிமா உலகிற்கு அறிமுகப்படுத் தினார்.

படத்தின் ஆரம்பத்தில் போடப்படும் கதை விளக்கத்திற் கான அட்டையில் இப்படி எழுதபட்டிருக்கும், 'இந்தப் படம் உங்களை சிரிக்க வைக்கலாம், ஒருவேளை கண்ணீரும் சிந்தவைக்கலாம்'. இந்தப் படம் முழுமையாகவே நகைச் சுவையும், சோகமும் கலந்த திரைப்படம்.

எட்னா முதல் காட்சியில் ஒரு இலவச மருத்துமனையில் இருந்து கைக் குழந்தையுடன் வெளியேறுவார், அப்பொழுது கம்பிகள் போன்றிருக்கும் கதவைத் திறந்து செவிலி எட் னாவை வெளியே அனுப்புவார், பார்ப்பதற்கு சிறையில் இருந்து வெளியே வருவது போலிருக்கும். எட்னா குழந் தையுடன் அறிமுகமாகும் போது வரும் விளக்க அட்டையில் 'இவளின் ஒரே பாவம் - தாய்மை' என்று காட்டப்படும். ஆதரவில்லாமல் பெறப்படும் குழந்தையின் நிலையையும், அந்த அன்னையின் நிலையையும் இதைவிட சிறப்பாக ஒரு காட்சியில் சொல்ல முடியாது. சாப்ளின் இந்தப் படத்தை ஒரு சுயசரிதையாகவே எடுத்தார். பல காட்சிகள் சாப்ளின் தன் சிறுவயதில் தன் தாயாருடன் கழித்த ஏழ்மை நாட்கள். இங்கு தன் தாயாரின் பாத்திரத்தை சாப்ளின் ஏற்றிருந்தார்.

எட்னா தன் குழந்தையை ஒரு காரில் விட்டுவிட்டு வருவார். அந்தக் காட்சியின் தொடராக ஒரு யேசு நாதரின் சிலை காட்டப்படும். இந்தப் படத்தில் சாப்ளினின் அறிமுகம் வழக்கமான நகைச்சுவையுடன் ஆரம்பிக்கும். ஒரு சேரியில் கிழிந்த உடை அணிந்த ஏழையாக வருவார். தன்னிடம் எதிர்பாராமல் வந்த குழந்தையை தொலைக்க பெரும் பாடுபடுவார். ஒரு கட்டத்தில் சேற்றில் வீசக் கூட யோசிப்பார்.

பின்பு எட்னா எழுதிய கடிதம் கிடைத்தவுடன், பரிவுற்று அந்தக் குழந்தையை வளர்க்கத் தீர்மானிப்பார். சிறுவனாக நடித்திருந்த ஜாக் கூகன், நடிப்பில் தன் முத்திரையை பதித் தார். அனைவரும் இன்றளவும் வியக்கும் ஒரு விடயம் கூகனின் நடிப்பு. அந்த அளவிற்கு இயல்பு. இந்தப் படத்தில் சாப்ளின் ஒரு கனவுக் காட்சியை வைத்திருப்பார். சந்தோஷ மாக இருக்கும் மக்களிடையே பொறாமை என்னும் அரக் கன் புகுந்து அதனால் மக்கள் அடித்துக்கொள்வார்கள்.

அதே மாதிரி, பணக்காரியாகிவிட்ட பின் எட்னா சேரியில் உள்ள குழந்தைகளுக்கு பரிசு பொருட்கள் கொடுக்க வரு வார். அப்பொழுது காட்டப்படும் விளக்க அட்டையில் 'தானம் - பலருக்கு பொழுதுபோக்கு. சிலருக்கு கடமை' எனக் காட் டப்படும். இது அக்மார்க் சாப்ளினின் முத்திரை.

சிறுவனை அதிகாரிகள் கடத்திச் செல்ல, அப்பொழுது சிறுவன் கெஞ்சுவதும், மீட்க வந்த சாப்ளின் அன்பு முத்தம் பொழியும்போது அந்தக் காட்சியைப் பார்க்கும் யாரும் கண் கலங்கிவிடுவார்கள். நாடோடி என்னும் கதாபத்திரம் வென்ற இடம் இதுதான். சாப்ளின் தன்னால் நினைத்த மாத்திரத்தில் ரசிகர்களை சிரிக்கவும் வைக்க முடியும், அழவும் வைக்க முடியும் என்று நிரூபித்ததும் இங்குதான்.

'த கிட்' தொடரும்...

சாப்ளின் வருவார்....

ஆதரவில்லாமல் பெறப்படும் குழந்தையின் நிலையையும், அந்த அன்னையின் நிலையையும் இதைவிட சிறப்பாக ஒரு காட்சியில் சொல்ல முடியாது. சாப்ளின் இந்தப் படத்தை ஒரு சுயசரிதையாகவே எடுத்தார். பல காட்சிகள் சாப்ளின் தன் சிறுவயதில் தன் தாயாருடன் கழித்த ஏழ்மை நாட்கள். இங்கு தன் தாயரின் பாத்திரத்தை சாப்ளின் ஏற்றிருந்தார்.


- அக்னிப்பார்வை -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# தமிழ் மின் அகரமுதலிகள்

தமிழில் அச்சுவடிவில் அகரமுதலிகள் இருப்பது போன்றே வளர்ந்துநிற்கும் கணிப்பொறி, இணையத்துணையுடன் மின்வடிவிலும் உள்ளன. ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழி அகரமுதலிகளைப் போல் நம் மின்அகரமுதலிகள் வளர்ந்தவடிவில் இல்லை. வளர்முக நிலையிலேயே உள்ளன. தமிழ் மின் அகரமுதலிகளை அறிமுகம் செய்யும் நோக்கில் இக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகரமுதலி மின்னகரமுதலியாக உள்ளது. அதுபோல் தமிழ் விக்கிப்பீடியாவின் அகரமுதலியும் மின்வடிவில் உள்ளது.

பால்சு அகரமுதலியும் (தமிழ் இணையப் பல்கலைக் கழகத் தளத்தில்), தமிழ் - செர்மனி - ஆங்கில அகரமுதலியும், ஆங்கிலம் - தமிழ் - சிங்கள அகரமுதலியும். வின்சுலோவின் ஆங்கிலம் - தமிழ் அகரமுதலியும், கிரியாவின் தற்கால அகரமுதலியும் இன்ன பிற அகரமுதலிகளும் மின்வடிவில் எந்த அளவில் வளப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் இன்னும் மேம்படுத்த வேண்டிய முறைகள் பற்றியும் இக்கட்டுரை விளக்குகிறது.

தமிழ் விக்கிப்பீடியா அகரமுதலி ஒரு பன்மொழி அகராதியாக, மிகச்சிறப்பாக இலவசமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டியதாக இருந்தாலும் அதில் தமிழ் அறிஞர்கள், இலக்கணப் புலவர்கள் பங்கெடுக்காமல் உள்ளதைச் சுட்டிக்காட்டி, அதனை வளர்த்தெடுக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்துவதாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

தமிழ் அகரமுதலிகளில் ஒலிப்புமுறைகள் இடம்பெற வேண்டியதன் தேவை, படங்கள், வரைபடங்கள், ஒவியங்கள், ஒலிக்கோப்புகள் இணைப்பு பற்றியெல்லாம் இக்கட்டுரை விரிவாக விளக்குகிறது. இதுவரை மின் அகரமுதலிகளில் இடம்பெற்றுள்ள சொற்களின் வகைப்பாடு, தேவை, நோக்கம், அகரமுதலிகளை வெளியிட்ட நிறுவனங்களின் நோக்கம் பற்றி எடுத்துரைத்து எதிர்காலம் மின்னகரமுதலிகளை எதிர்நோக்கியுள்ளதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

## தென்னாசிய மின் நூலகம்

(Digital South Asia Library)
(http://dsal.uchicago.edu/about.html)

தென்னாசிய மின் நூலகத் தளத்தில், தென்னாசியாவில் வழங்கும் பலமொழிகளுக்கும் உரிய மின் அகரமுதலிகள் ஆய்வாளர்கள், ஆர்வலர்களின் பயன்பாட்டுக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் இலவசமாகப் பயன்படுத்தும் வகையில் உள்ளன. அவ்வகையில் அசாமி, பலுசி, பெங்காளி, ஆங்கிலம், குசராத்தி, இந்தி, காசுமீரி, மலையாளம், மராத்தி, நேபாளி, ஒரியா, பாலி, பஞ்சாபி, பெர்சியன், இராசத்தானி, சமஸ்கிருதம், சிந்தி, தமிழ், தெலுங்கு, உருது மொழி அகரமுதலிகளும், பர்ரோ, எமனோவின் திராவிட வேர்ச்சொல் லகரமுதலியும் (Dravidian etymological dictionary) குறிப்பிடத்தக்கன.

## தமிழ்மொழி அகரமுதலிகள்

தென்னாசிய மின் நூலகத் தளத்தில் தமிழ்மொழிப் பகுதியில் பெப்ரியசு அகரமுதலி (Fabricius's Tamil and English dictionary), கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, ஆல்பின் அகரமுதலி, சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி, வின்சுலோ அகரமுதலிகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு அகரமுதலிகளையும் வாங்கிப் பாதுகாத்தல், பயன்படுத்தலில் அச்சுவடிவு எனில் கையாளத் தொல்லையாக இருக்கும். ஆனால் மின்னகரமுதலியாக இருப்பதால் சொற்பொருள் வேறுபாடு அறியவும், ஆய்வுக்குக் கூடுதல் தகவல் பெறவும் வாய்ப்பாக உள்ளது.

## சென்னைப் பல்கலைக்கழகப் பேரகரமுதலி

(Tamil lexicon.University of Madras> 1924-1936)
http://dsal.uchicago.edu/dictionaries/tamil-lex/

தமிழ் அகரமுதலிகளில் சென்னைப் பலைகலைக்கழகப் பேரகரமுதலிக்குத் தனியிடம் உண்டு. தமிழில் அறிவியல் அடிப்படையில் பல அறிஞர் பெருமக்களால் உருவாக்கப்பட்ட இவ்வகரமுதலியில் தமிழல்லாத பிறமொழிச்சொற்களைத் தமிழாகக் காட்டப்பட்டுள்ளமையை அறிஞர்கள் சிலர் எடுத்துக்காட்டி விளக்குவது உண்டு. திருத்தப்பட்ட பதிப்பு வெளிவர உள்ள இந்த அகரமுதலியின் முன்னைப் பதிப்பாசிரியராக விளங்கிய பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் தலைமையில் இயங்கிய குழுவினர் இந்த அகரமுதலியை மிக நுட்பமுடன் உருவாக்கியுள்ளனர். தமிழ் மின் அகரமுதலிகளுள் சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி பல சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. தமிழ்ச் சொல் அதனை அடுத்து, அதற்குரிய ஆங்கிலச்சொல், ஆங்கில விளக்கம், இலக்கணக்குறிப்பு, மேற்கோள், மேற்கோள் நூல் குறிப்பு, தொடர்புடைய சொற்கள் என அச்சு வடிவில் உள்ள விளக்கங்களை ஒன்றுபடுத்திப் பார்க்கும் வசதிகள் பயன்படுத்துவோருக்குப் பல வகையாகத் துணைபுரிகின்றன. முன் பக்கம், பின் பக்கம் பார்ப்பதுபோலவே முன் சொல், பின் சொல் பார்க்கும் வசதியும் உள்ளது.

## பெப்ரியசு உருவாக்கிய பெப்ரியசு அகரமுதலி

(Fabricius> Johann Philipp. J. P. Fabricius's Tamil and English dictionary)
http://dsal.uchicago.edu/dictionaries/fabricius/)

பெப்ரியசு அகரமுதலி நான்காம் பதிப்பு (1972) மின்னகரமுதலியாக உள்ளது. இது தமிழ், ஆங்கில அகரமுதலியாகும்.

ஒருங்குகுறி வடிவில் தமிழ் எழுத்துகள் உள்ளதால் எழுத்துரு சிக்கல் இல்லை. அகரவரிசைப்படி சொற்கள் உள்ளன.

தமிழில் தட்டச்சிட்டும், ஆங்கிலத்தில் தட்டச்சிட்டும் தேடலாம். சான்றாக mother என்ற ஆங்கிலச் சொல்லைத் தட்டச்சிட்டால் அதனுடன் தொடர்புடைய பல தமிழ்ச் சொற்களை அதன் பொருள்களை நாம் அறியலாம். தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கம் இருந்து நமக்குப் பேருதவி புரிகிறது.

பெப்ரியசு அகரமுதலியில் தேட சொல்லாக யாப்பு என்பதைத் தட்டச்சிட்டால் யாப்பு தொடர்பான பக்கம் நமக்கு விரியும். இதில் முழு விளக்கமும் வேண்டாம், குறிப்பிட்ட சொல்லுக்குரிய பொருள் மட்டும் போதும் என்றால் அதற்குரிய பெட்டியில் சரி குறியைத் தேர்ந்து உரிய யாப்பு என்ற சொல்லுக்குரிய பொருளை மட்டும் அறியலாம். இதுபோல் குறிப்பிட்ட சொல்லுக்குரிய பொருள் மட்டும் அறிந்தால் போதும் என்றால் அந்தப் பகுதிக்குச் செல்லும்பொழுது நமக்குரிய தேர்வுச் சொற்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கும்.

ஒரு பக்கத்தைப் பார்வையிடும்பொழுது முன் பக்கம் பின் பக்கம் பார்க்கும் வசதியும் உண்டு. ஒருங்குகுறியில் இருக்கும் விளக்கத்தை ascii குறியீட்டு எழுத்திலும் படிக்க இயலும்.

## கதிரைவேற் பிள்ளையின் தமிழ்மொழி அகராதி

(N. Kathiraiver Pillai's Tamil Moli Akarathi: Tamil-Tamil dictionary)
http://dsal.uchicago.edu/dictionaries/kadirvelu/

கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி அனைவராலும் விரும்பப்படும் அகரமுதலியாகும். ஆறாம் பதிப்பாக வெளிவந்த (1922) அகரமுதலி மின்னகரமுதலியாக உருவாகியுள்ளது. இது தமிழ் - தமிழ் அகரமுதலியாகும். இதில் 'அ' என்ற ஒற்றை எழுத்தை அழுத்தித் தேடும்பொழுது 5479 தேடல் முடிவுகள் கிடைக்கின்றன.

'சிற்சில அகராதிகள் காலந்தோறும் அவரவரால் வெளியிடப்பட்டன. அவைகளெல்லாம் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் நூல்களிலும், வேதாந்த சித்தாந்த நூல்களிலுமுள்ள அகப்பொருள், புறப்பொருட் பாகுபாடுகள், குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகள், வெண்பா முதலிய பாவகை, பாவினம், அலங்காரவகை, பரதராக தாளப்பகுதி, அங்கக்கிரியை, உடலவருத்தனை, அவிநயம், நிலை, கூத்துவகரப்பம், வங்கியமுதலிய கருவியிலக்கணம், பண், வண்ணப்பகுதி, வரிப்பகுதி, தத்துவம், முப்பொருளிலக்கணம் என்றின்னோரன்ன முக்கிய விடங்களாகிய சொற்பொருட் டொகைகளைக் கொள்ளாதனவாயிருந்தலை உணர்ந்த சில நண்பர்கள் அவைகளெல்லாம் அமைய ஒரு அகராதியொன்று தருகவென்று பன்னாளும் பன்முறையுந் தூண்ட அதற்கிசைந்து யாழ்ப்பாணம் மேலைப்புலோலி வித்வான் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களைக் கொண்டு பரதசேனாபதீயம், இசை நுணுக்கம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, அன்பினைந்திணை, கல்லாடம், தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, கலித்தொகை பத்துப்பாட்டு, இலக்கண விளக்கம், வீரசோழியம், புராணங்கள், இதிகாசங்கள், சூளாமணி, புறப்பொருள் வெண்பாமாலை, சித்தாந்த சாத்திரம், பிங்கலந்தை, திவாகரம் முதலிய அரியபெரிய நூல்களினின்றுஞ் சொற்களையும் தொகைப்பொருள்களையும் செந்தமிழ்நாட்டு வழக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழிகள் பலவற்றையுஞ் சேர்த்து அச்சிட்டு வெளிப்படுத்தினேன்.' என்னும் நூலின் முகவுரைப் பகுதிகளைக் கற்கும் பொழுது கதிரைவேற்பிள்ளை அவர்களின் அகராதிச் சிறப்பு நமக்குப் புலப்படும்.

### டேவிட் எம்.சி. ஆல்பின் அடிப்படைத் தமிழ்ச்சொற்களின் அகரமுதலி

(A core vocabulary for Tamil)

http://dsal.uchicago.edu/dictionaries/mcalpin/

டேவிட் எம்.சி.ஆல்பின் அகரமுதலியை பென்சில்வேனியா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது (1981). இந்த அகரமுதலியில் 'அ' என்ற எழுத்தைத் தட்டச்சிடும்பொழுது 99 தேர்வு முடிவுகளைக் காட்டுகின்றது. சந்தி என்ற ஒரு சொல்லைத் தட்டச்சிடும்பொழுது மூன்று தேர்வு முடிவுகள் கிடைக்கின்றன. அதில் சந்தி, சந்தி, சந்திரன் என்னும் சொற் தலைப்புகள் காட்டப்பட்டு விளக்கம் தரப்பட்டுள்ளன.

பேச்சு வழக்கில் உள்ள டம்பளர், லோட்டா, சார் என்ற பிறமொழிச்சொற்களையெல்லாம் தமிழ்ச்சொல்லாகக் காட்டும் வழக்கம் இந்த அகரமுதலியில் உள்ளது. தமிழில் பயன்பாட்டில் உள்ள சொற்களுக்கு வழக்குச்சொல்லால் விளக்கம் வரையப்பட்டுள்ளது.

பேச்சுத் தமிழுக்கு இந்த அகரமுதலியில் முதன்மையளிக்கப்பட்டுள்ளது. அறுபத்தெட்டுப் பக்கங்களில் அமைந்துள்ள இந்த அகரமுதலி தமிழாய்வில் ஈடுபடும் அயல்நாட்டாருக்கு மிகுதியும் பயன்படும்.

**Na Kadirvelu Pillai**

**TAMIL MOLI AKARATHI**

கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி அனைவராலும் விரும்பப்படும் அகரமுதலியாகும். ஆறாம் பதிப்பாக வெளிவந்த (1922) அகரமுதலி மின்னகர முதலியாக உருவாகியுள்ளது. இது தமிழ் - தமிழ் அகரமுதலியாகும். இதில் 'அ' என்ற ஒற்றை எழுத்தை அழுத்தித் தேடும்பொழுது 5479 தேடல் முடிவுகள் கிடைக்கின்றன.

### வின்சுலோ தமிழ் அகரமுதலி

(A comprehensive Tamil and English dictionary of high and low Tamil)

http://dsal.uchicago.edu/dictionaries/winslow/)

மிரோன் வின்சுலோ அவர்கள் அமெரிக்காவில் உள்ள வெர்மான் மாநிலத்தில் வில்லிசுடன் என்ற ஊரில் 1789 ஆம் ஆண்டு திசம்பர் 1 இல், பிறந்தார். இவர் ஒரு கிறித்தவச் சமயபோதகர். இவர் தொகுத்த தமிழ் ஆங்கில விரிவு அகராதி (A Comprehensive Tamil and English Dictionary) 68,000 சொற்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.சோசப் நைட் பிரபு அவர்களின் மூலப்படியைத் துணையாகக் கொண்டு நாளும் மூன்று மணிநேரம் என்ற அளவில் இருப தாண்டுகள் உழைத்து வின்சுலோ இந்த அகரமுதலியை 1862 இல் உருவாக்கினார். தமிழ் ஆங்கிலம் என்ற அமைப்பில் இந்த அகரமுதலி உள்ளது.

அ தொடங்கி வெளவு என்று முடியும் சொல் ஈறாக 969 பக்கத்தில் தமிழ்ச்சொற்களும் சொற்களுக்கு உரிய விளக்கமும் உள்ளன. விடுபட்ட சொற்களையும் இணைத்து 976 பக்கத்தில் வின்சுலோ அகராதித் தமிழ்ச்சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் கொண்டு விளங்குகிறது. சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலிக்கு முன்மாதிரியான அகரமுதலியாக இதனைக் கொள்ளலாம். இதில் இலக்கிய மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன.

### தமிழ் விக்சனரி

http://ta.wiktionary.org/wiki

விக்கிப்பீடியா என்ற தளம் பன்மொழியில் தகவல்களைத் தரும் தளமாகும். இத்தளம் 2001 ஆம் ஆண்டு ஆங்கில மொழியில் உருவாக்கப்பட்டது. உலக அளவில் 267 மொழிகளில் விக்கிப்பீடியா கலைக்களஞ்சியம் செய்திகளைத் தருகிறது. இதன் ஒரு பகுதியாக விக்சனரிகள் உள்ளன. ஒவ்வொரு மொழிச்சொற்களுக்கும் அகரநிரலில் பொருள் தருவது விக்சனரியின் இயல்பாக உள்ளது. ஆங்கிலமொழியில்தான் முதன்முதல் விக்சனரி உருவானது. 172 மொழிகளுக்கான விக்சனரிகள் உள்ளன.

தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் வரையும் முயற்சி 2004 இல் தொடங்கப்பட்டது. இன்று 1,12,587 சொற்களைக் கொண்டு (15.04.2010) உலக அகரமுதலிகளில் 24 ஆம் இடத்தில் உள்ளது.

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்ற அமைப்பிலும், ஆங்கிலம்-தமிழ் என்ற அமைப்பிலும் தமிழ்ச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. தமிழுக்கு நிகரான பிறமொழிச் சொற்களும் (எ.கா. ஆங்கிலம், பிரஞ்சு, ஜேர்மன், இந்தி, மலையாளம், கன்னடம்) உள்ளன. ஆங்கிலச் சொற்களை ஒலித்துப் பார்க்கும் வசதியும் உள்ளது. தமிழ் விக்சனரியில் புழக்கத்தில் உள்ள பல சொற்களுக்கு உரிய படங்கள் உள்ளன.

அம்மா என்ற சொல் பற்றிய பகுதியாக இருக்கும் இப்பக்கத்தில் அம்மா என்ற சொல்லுக்கு உரிய சொற்பிறப்பு, பெயர்ச் சொற்கள் என்ற இரண்டு பெரும் பிரிவில் செய்திகள் அடக்கப்பட்டிருக்கும். சொற்பிறப்பு விவரிப்பதற்குத் தலைப்பு உள்ளது (இனித்தான் சொல்லாய்வாளர்கள் அந்தப் பகுதியை முழுமைப்படுத்த வேண்டும்). அம்மா என்பதற்கு 1. தாயை விளிப்பதற்குப் பயன்படும் சொல். 2. மரியாதைக்குரிய பெண்களை விளிப்பதற்குப் பயன்படும் சொல் என்று குறிப்புகள் இருக்கும். அதனை அடுத்து மொழிபெயர்ப்பு என்ற தலைப்பில் மலையாளம், இந்தி, தெலுங்கு, ஆங்கிலம், பிரஞ்சு, சேர்மன் உள்ளிட்ட மொழிகளில் mother என்ற சொல்லை எவ்வாறு அழைக்கின்றனர் என்பதற்கு உரிய சொல் பார்வையிடும் வசதியும் உள்ளது. (சில மொழிகளில் விடுபாடு உள்ளது).

தொடர்புள்ள சொற்கள் என்ற தலைப்பில் அன்னை, தாய், அம்மம்மா, அம்மாச்சி, அம்மான், அம்மன், அம்மாயி என்ற சொற்கள் உள்ளன. இவற்றையும் பார்க்க என்ற தலைப்பில் 'அப்பா' என்ற சொல் உள்ளது. அதனைச் சொடுக்கிப் பார்த்தால் அப்பா என்பதற்குத் தந்தை என்ற விளக்கமும் ஆங்கிலம், இந்தியில் இச்சொல் எவ்வாறு அழைக்கப்படுகிறது என்ற குறிப்பும் உள்ளது.

### விக்சனரியில் சொற்களை உள்ளீடுவது எப்படி?

தமிழ் விக்கிப்பீடியாவைப் பயன்படுத்த புகுபதிவு செய்தல் நன்று. புகுபதிவு செய்யாமலும் திருத்தங்களைச் செய்யலாம்.

விக்கிப்பீடியாவின் விக்சனரியில் முன்பே சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாம் பதிவு செய்ய நினைக்கும் சொல் முன்பே பதிவேறாமல் இருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். புதிய பக்கத்தை உருவாக்கவும் என்ற பகுதியில் உள்ள கட்டங்களில் ஆங்கிலம், தமிழ் இந்தப் பகுப்பில் பெயர், வினை, உரிச்சொற்களுள் உரியனவற்றை ஆராய்ந்து அந்தப்பெட்டியில் நாம் உள்ளிட நினைத்த சொற்களை இட்டு அதற்குரிய விளக்கங்களை விக்சனரியில் கொடுத்துள்ள விளக்கக் குறிப்புகளைக் கொண்டு உள்ளிட முடியும்.

தமிழ் விக்சனரியின் முதற் பக்கத்தில் தமிழ் விக்சனரி பற்றிய விவரங்கள் உள்ளன. இதில் சொற்களைத் தேடுவதற்கு வாய்ப்பாகத் தமிழ் எழுத்துகள், ஆங்கில எழுத்துகளின் முதல் எழுத்துகள் இருக்கும். இவற்றின் துணைகொண்டும் தேடலாம். மேலும் சொற்பகுப்புகள், பின்னிணைப்புகள், அண்மைப் பங்களிப்புகள் என்ற தலைப்புகளைச் சொடுக்கியும் ஒவ்வொரு பயன்பாட்டையும் பெறலாம்.

அதுபோல் கலைச்சொற்கள் என்ற தலைப்பில் தமிழ்-ஆங்கிலம், ஆங்கிலம்-தமிழ் என்ற இரு வகையில் சொற்கள் பகுக்கப்பட்டுள்ளன. தமிழ் - ஆங்கிலம் என்ற வகையில் முதலில் தமிழ்ச்சொற்களும் அடுத்து அதற்குரிய ஆங்கிலச் சொற்களும் எந்தத்துறையில் இந்தச்சொல் பயன்படுகிறது என்ற குறிப்பும் உள்ளன. அதுபோல் ஆங்கிலம் - தமிழ் என்ற வகையில் ஆங்கிலச்சொல்லும் அதற்குரிய தமிழ்ச் சொல்லும் எந்தத்துறையில் பயன்படுகிறது என்ற விவரமும் உள்ளன.

தமிழ் அகராதி என்ற பகுப்பில் பழந்தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள சொற்கள் குறித்த அகராதியாக இது உள்ளது. இப்பகுதி இன்னும் வளப்படுத்த வேண்டிய பகுதியாக . பின்னிணைப்புகள் என்ற பகுதியில் நாடுகள், பறவைகள், விலங்குகள் முதலானவற்றின் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ்நூல் பட்டியல் என்ற குறுந்தலைப்பில் உள்ள நூல் பட்டியல் நீண்டு, வளர்க்கப்பட வேண்டிய பகுதியாகும். கல்வித்துறைகள் என்ற பகுப்பில் உள்ள தலைப்புகள் தொடர்பான பல சொற்கள் இணைக்கப்பட வேண்டும் என்பது அப்பட்டியலைப் பார்வையிடும் பொழுது நமக்குத் தெரிகிறது.

(மிகுதி அடுத்தவாரம்)

- முனைவர் மு. இளங்கோவன்








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இலக்கியம்

# குற்றாலக்குறவஞ்சி

குற்றாலக்குறவஞ்சியை எழுதியவர் திரிகூட ராசப்ப கவிராயர் என்பவர். இவர் தமிழகத்தின் தென்காசி அருகிலுள்ள மேலகரம் என்ற ஊரில் பிறந்தவர். குற்றாலத்தில் உள்ள குற்றாலநாதரைப் பற்றியும் அவரது மனைவி வசந்தவல்லியைப் பற்றியும் பாடியுள்ளார். அத்துடன் அந்த மலையின் வளம், அந்த மலையில் வாழ்ந்த மக்களின் நாகரீகம் அவர்களின் கடவுள், பழக்கவழக்கங்கள் என்பதை பாடலின் வாயிலாக அறிந்துகொள்ளலாம். இந்தப் பாடல்கள் குறத்தி வாயிலாக பாடுவதுபோல் அமைக்கப்பட்டுள்ளதால் இதன் பெயர் குறவஞ்சி என்று அழைக்கப்படுகிறது. குற்றாலத்தைப்பற்றி பாடுவதால் குற்றாலக் குறவஞ்சி. குறத்தி திருக்குற்றாலநாதருக்கும் வசந்தவல்லிக்கும் உள்ள காதலை அறிந்து அதனை வசந்தவல்லியிடம் பாடலாகப் பாடி பரிசு பெறுவதுபோல் அமைந்துள்ளது.

காடுகளில் வாழும் வேடர்கள் தங்கள் கண் பார்வையாலேயே உற்று நோக்கித் தேவர்களை அழைப்பார்கள். வான் வழியாகச் செல்லும் சித்தர்கள் கீழிறங்கி இம்மலைக்கு வந்து உடலுக்கு நன்மை அளிக்கும் யோகங்கள் என்னும் சித்து வேலையைச் செய்வார்கள். இம்மலையிலுள்ள தேன்கலந்த மலை அருவியின் அலைகள் மேல் நோக்கி உயர்ந்து பாய்ந்து வானத்தில் இருந்து வழிந்து ஓடும். அதனால் செந்நிறச் சூரியனின் தேரில் பூட்டிச் செல்லும் குதிரைக் கால்களும் தேர்ச் சக்கரமும் வழுக்கி விழும்.

வளைந்த இளம் பிறையைச் சூடிய சடை முடியையும் உடையவர் திருக்குற்றாலநாதராகிய சிவபெருமான். அவர் எழுந்தருளியுள்ள சிறப்பு மிக்கது திருக்குற்றாலமலை. அம்மலையே எங்களுக்கு உரியது என்று குறத்தி மலைவளம் கூறுவதாக இப் பாடல் அமைந்துள்ளது.





இந்தப்பாடல்களைப் படித்த மதுரை மன்னர் முத்துவிசயர்ங்க சொக்கநாத நாயக்கர் பாடலில் மயங்கி புலவருக்கு குறவஞ்சி மேடு என்ற நிலப் பகுதியை பரிசளித்தாராம். இதிலுள்ள எதுகை மோனை, இந்தப் பாடல் வரிகளில் இருக்கும் அழகு, இந்தப் பாடல்கள் நம்மைக் கவர்கின்றன.

குறத்தி மலை வளம் கூறுதல் என்ற பகுதியில் இருந்து இரண்டு பாடல்கள். முதல் பாடல் நான் பள்ளியில் படிக்கும்போது மனப்பாடப் பகுதியில் வந்தது. அப்போது படித்தது இன்னும் நினைவில் இருக்கிறது.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர்
ககனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல் இளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே.

இதன் பொருள்:

திருக்குற்றாலமலையில் உள்ள ஆண் குரங்குகள் பலவகையான பழங்களைப் பறித்து மந்திகளுக்கு கொடுத்துக் கொஞ்சி மகிழும். அப்பழங்களைத் தின்றும் சிதைத்தும் பெண் குரங்குகள் விளையாடும். இவ்வாறு மந்தி சிந்திய பழங்களை வான் உலகில் வாழும் தேவர் கூட்டம் மிக வேண்டி விரும்பிக்கேட்கும்.

இன்னொரு பாடல்

கொல்லிமலை எனக்குஇளைய செல்லிமலை அம்மே
கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை அம்மே
எல்உலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே
இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே
சொல்அரிய சாமிமலை மாமிமலை அம்மே
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே
செல்இனங்கள் முழவுகொட்ட மயில்இனங்கள் ஆடும்
திரிகூடமலை எங்கள் செல்வமலை அம்மே.

இதன் பொருள்:

கொல்லி மலையானது எனக்குப் பின்பிறந்த செல்லி என்பவளுக்கு உரிய மலை ஆகும். அவள் கணவனாகிய குமாரக் கடவுளுக்குக் குடிக்காணி ஆட்சியாக இருப்பது பழநி மலை ஆகும். ஞாயிறு மேல் எழும்பிச் செல்கின்ற விந்தை என்னும் மலையே என் தந்தைக்கு உரிய மலை ஆகும். இமயமலை என்னுடைய தமையனுக்கு உரிய மலை ஆகும்.

சொல்வதற்கு அரிய சுவாமிமலை என் மாமியாருக்கு உரிய மலை ஆகும். நாஞ்சில் நாட்டில் உள்ள வேள்வி மலை என் தோழிக்கு உரிய மலை ஆகும். மேகக்கூட்டங்கள் மிருதங்கம் போன்று இனிய ஓசையை எழுப்ப, அதற்கேற்ப மயில்கள் நடனம் ஆடுகின்ற திரிகூடம் என்னும் திருக்குற்றால மலையே எங்களுக்குச் செல்வப் பொருளாக இருக்கின்ற மலை ஆகும்.

# புரட்சி

சொந்த நாய்களுக்குச்
சொத்தெழுதி வைக்கும் தேசங்களே!
ஓர் இனமே
நிலமிழந்து நிற்கிறதே
நிலம் மீட்டுத்தாருங்கள்!

பூனையொன்று காய்ச்சல் கண்டால்
மெர்சிடீஸ் கார் ஏற்றி
மருத்துவமனை ஏகும் முதல் உலக நாடுகளே!

ஈழத்து உப்பங்கழியில்
மரணத்தை தொட்டு
மனித குலம் நிற்கிறதே!
மனம் இரங்கி வாருங்கள்!

வற்றிய குளத்தில் செத்துக் கிடக்கும்
வாளை மீனைப்போல்
உமிழ்நீர் வற்றிய வாயில்
ஒட்டிக்கிடக்கும் உள்நாக்கோடு
ரொட்டி ரொட்டியென்று
கைநீட்டும் சிறுவர்க்குக்
கை கொடுக்க வாருங்கள்!

தமிழச்சிகளின் மானக்குழிகளில்
துப்பாக்கி ஊன்றித் துளைக்கும்
சிங்கள வெறிக் கூத்துக்களை
நிரந்தரமாய் நிறுத்துங்கள்!

வாய்வழி புகட்டிய தாய்ப்பால்
காதுவழி ரத்தமாய் வழிவது கண்டு
கண்வழி உகுக்கக் கண்ணீரின்றிக்
கண்ணீரை மாற்றுங்கள்!

அடுக்கிவைத்த உடல்களில்
எந்த உடல் தகப்பன் உடல் என்று தேடி
அடையாளம் தெரியாத ஒரு பிணத்துக்கு
அழுதுதொலைக்கும் பிள்ளைகளின்
அவலக்குரல் போக்குங்கள்!

எனக்குள்ள கவலையெல்லாம்
இனம் தின்னும்
ராஜபக்சே மீதல்ல?
ஈழப்போர் முடிவதற்குள்
தலைவர்கள் ஆகத்துடிக்கும்
தலையில்லாப் பேர்வழிகள் மீதல்ல

www.tamilarangam.net



முட்கம்பி வேலிக்குள் கண்டேன். என் மகனைக் கண்டாயா? ஒரு தாயின் கேள்வி இது. என் மகளைக் கண்டாயா? ஒரு தந்தையின் கேள்வியிது. அண்ணாவை, அக்காவைக் கண்டீர்களா? இது சகோதரர்களின் கேள்வி. ஒரு குடும்பத்தையாவது அல்லது ஒருவரையாவது துயரமில்லா முகத்துடன் நான் காண முடியவில்லை.

மாவீரரோ அல்லது போராளியோ இல்லாத குடும்பம் எதனையும் நாம் காணமுடியாது. சில வேளை இரண்டும் சேர்ந்த குடும்பங்கள் பல. மாவீரரான குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோரிடம் துயரம் ஒரு கரை ஒதுங்கியிருக்கும். ஆனால் போராளிக் கைதிகளானோரின் குடும்பங்களில் அல்லது இறுதியில் தமது வீரப் புதல்வர்களுக்கோ, புதல்விகளுக்கோ என்ன நடந்தது என்று தெரியாதிருக்கும் குடும்பங்களில் துயரம் நிரம்பி வழிந்தவண்ணம் இருந்தது.

**லலித் அத்துலத்முதலியின் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கையும் அதன் முதல்கட்டமாக 'ஒப்ரேஷன் வடமாராட்சியும்' மேற்படி மலேசியத் திட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையாகும். ராஜபக்சாக்கள் கால் நூற்றாண்டின் பின்பு அதே திட்டத்தை மேலும் கொடூரமான வழியில் நடைமுறைப் படுத்தியுள்ளார்கள் என்பதே உண்மை.**

யாரைப் பார்த்து யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? நாற்புறமும் கைதிமுகாமிலாயினும் சரி, அகதிமுகாமிலாயினும் சரி சப்பாத்துக் கால்களின் சத்தம் கேட்கும்போது இதயம் நசிந்து நெருடும் ஒலி என் காதுக்குள் கேட்கும். கைதிமுகாமில் இராணுவத்தினரின் குதூகலத்துக்கும் எம்மவரை நோக்கிய கிண்டல் கேலிக்கும் ஒரு குறையும் இல்லை. அகதிமுகாமில் இராணுவத்தினர் எஜமானர்களாக நடந்தாலும் கைதிமுகாமில் ஒரு போராளியைக் காணும்போது அந்த இராணுவத்தினருக்கு ஏற்பட்ட குதூகலத்தின் அளவு பெரிதாயிருந்ததைப் போலல்லாமல் இங்கு அகதிகளைக் காணும்போது அவர்களிடம் ஒருவகைக் கிண்டல் நிறைந்த இழிவான பார்வையிருந்தது.

பலதசாப்தப் போராட்டங்களின் பின்பு, அளப்பெரும் தியாகங்களுக்கும் இழப்புக்களுக்கும், அழிவுகளுக்கும் பின்பு இப்படி ஒரு மோசமான அடிமைநிலை எமக்கேற்பட்டதற்கான விளக்கத்தை என் மனம் தேடிக் கொண்டிருந்தது. போராட்டம் பற்றிய ஒரு மீள்பார்வையும் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் வெற்றி தோல்வி பற்றிய சரியான மதிப்பீடும் விடுதலைக்கான புதியதொரு பாதையும் தேவை என என் மனம் மீண்டும் மீண்டும் எனக்கு எடுத்துரைத்துக் கொண்டிருந்தது. நான் ஓய விரும்பினாலும் சிங்கள ஆதிக்கத்தின் இரும்புக் கரங்களும், நாம் உட்பட்டிருந்த அடிமை நிலையும் விடுதலையைத் தவிர வேறு எதனையும் சிந்திக்காதே என்று எனக்கு கட்டளையிட்டது.

'மோட்டுச் சிங்களவன்' என்று தவறாக மதிப்பிட்ட அப்பிழையான மதிப்பீட்டைக் கொண்டிருந்த தமிழ்ப் பழமொழிக்காக ஆயிரக்கணக்கான தடவைகள் எம் தலைகளை நாமே குட்டவேண்டும் என்று வரலாறு எமக்குக் கட்டளையிடுகின்றது. மிகப் புத்திசாலித்தனமாக, தமக்கே உரிய மெருகான ராஜதந்திர நகர்வுகளின் மூலம் சிங்கள ஆட்சியாளர் எம்மைச் சிறுபிள்ளைகளாக எண்ணி நசுக்கிவிட்டனர். ஆனால் மீண்டும் எழக்கூடிய நாகரிகம் படைத்த மக்கள் நாம் என்பதை வரலாற்றில் நிரூபிக்க வேண்டிய பொறுப்பில் உள்ளோம் என்பதை அகதி முகாமும், கைதி முகாமும், சிங்கள அரசியல் ராஜதந்திரமும் எனக்குத் திரும்பத் திரும்பப் போதித்த வண்ணம் உள்ளன.

அகதிமுகாமில் நான் காலடி எடுத்து வைத்தபோது 1984ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் வெளியிடப்பட்டிருந்த 'தளிர்' என்ற மாதாந்தச் சஞ்சிகையில் வெளிவந்திருந்த ஒரு பெரிய சிறப்புக் கட்டுரை ஒன்று என் நெஞ்சில் அலைமோதியது. மலேசியாவில் 1947ம் ஆண்டு கொமினிஸ்டுக்களின் ஆயுதப் போராட்டம் ரெம்பிலா, பிரிஜ் போன்ற ஆங்கில இராணுவத் தளபதிகளினால் ஒடுக்கப்பட்ட விதம் பற்றியதே அக்கட்டுரை.

அவ்வாறு அந்த ஆயுதப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக, அதற்கு அடித்தளமாய் இருந்த அம் மக்களை அவர்களது குடியிருப்பு நிலங்களிலிருந்து அப்படியே வெளியேற்றி சீன இனம் வாழ்ந்த நிலப் பகுதியில் இருந்து பிரித்து மலேயினம் வாழ்ந்த நிலப்பகுதியில் குடியமர்த்தி மக்களைப் போராளிகளிடமிருந்து முற்றிலும் பிரித்துப் பின் போராளிகளை அடியோடு அழித்தார்கள், எஞ்சியோரைச் சிறைகளில் அடைத்தார்கள்.

இப்படி மலேசியப் பாணியிலான பலாத்காரக் குடிபெயர்ப்பு தமிழ்மண்ணில் நடக்க வாய்ப்புண்டு என்ற முன்னெச்சரிக்கையை அப்போது அந்தக் கட்டுரை செய்திருந்தது. லலித் அத்துலத்முதலி மலேசியப் பல்கலைக்கழகம் ஒன்றில் சிறிது காலம் பணியாற்றியிருந்தவர். இப் பின்னணியில் பந்தோபஸ்து அமைச்சராக 1983 கறுப்பு யூலைப் படுகொலைக்குப் பின் பதவியேற்ற லலித் மலேசியப் போராட்டம் அடக்கப்பட்ட விதத்தைப் பற்றிப் படித்துக்கொண்டிருந்ததாக ஒரு சிங்கள நண்பர் வாயிலாக அக்கட்டுரை ஆசிரியர் அறிந்ததன் விளைவே அக்கட்டுரை என்ற செய்தியும் அக்கட்டுரையுடன் பிரபலமாய்ப் பேசப்பட்டது. இப்போது பலாத்காரமாய் இடம்பெயர்க்கப்பட்ட மக்கள் வாழும் அகதிமுகாம்களையும், போராளிக் கைதிகளை அடைத்து வைத்துள்ள சிறை முகாம்களையும் பார்த்தபோது அக்கட்டுரை என் கண்முன் படமாய் ஓடியது.

லலித் அத்துலத்முதலியின் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கையும் அதன் முதல் கட்டமாக 'ஒப்ரேஷன் வடமாராட்சியும்' மேற்படி மலேசியத் திட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையாகும். ராஜபக்சாக்கள் கால் நூற்றாண்டின் பின்பு அதே திட்டத்தை மேலும் கொடூரமான வழியில் நடைமுறைப்படுத்தியுள்ளார்கள் என்பதே உண்மை.

இதனை இந்தியச் சஞ்சிகை ஒன்றுக்கான பேட்டியில் கோத்தபாய ராஜபக்சே ஓரளவு வெளிப்படையாகச் சொல்லியுள்ளார். லலித் காலத்தில் இந்தியாவின் எதிர்ப்பும், பாதகமான சர்வதேசச் சூழ்நிலையும் இருந்ததாகவும் ஆனால் முள்ளிவாய்க்கால் காலத்தில் தனது அண்ணன் மகிந்த ராஜபக்ச சாதகமான வெளியுறவுக் கொள்கையினைப் பின்பற்றியதன் விளைவாக இராணுவ வெற்றியைச் சாத்தியமாக்கினார் என்றும் கூறியுள்ளார். அதாவது கோத்தபாயாவின் பார்வையில் இப்போது இருப்பதைப் போலவே முன்பிருந்த சிங்கள இராணுவத்தினரும் வீரமிக்கவர்கள்தான். ஆனால் அப்போது வெளியுறவுக் கொள்கை பொறுத்து சரியான தலைமைத்துவம் இல்லாததுதான் அன்றையத் தோல்விக்குக் காரணம் என்றும் ஆனால் தற்போது தனது அண்ணனின் தலைமையில் சரியான வெளியுறவுக் கொள்கைத் தலைமைத்துவம் இருந்ததால் இராணுவம் வெற்றி கொள்ள முடிந்தது என்றும் அவர் கூறினார். இந்த உண்மைகளை வெளியில் தெரிவிக்க வேண்டும் என்ற நேர்மையின் நிமித்தம் அவர் இதனைத் தெரிவிக்கவில்லை. ஆனால் பொன்சேகாவின் முக்கியத்துவத்தை குறைப்பதற்காக இவ்வுண்மையைத் தெரிவிப்பது சாதகமாய் அமையும் என்பதற்காகவே அவர் இந்த உண்மையை வெளியிட்டார்.

மும்பையில் 166 பேரைப் பலி கொண்ட பாக்கிஸ்தானிய கில்லிங் மெசின்களின் கொலைத் தாக்குதல் 120 கோடி இந்திய மக்களினது நெஞ்சங்களையும் பெந்தூலத்தைப் பிடித்து விட்டாற் போற் ஒரு கணம் அசையவிடாது நிறுத்தி விட்டது.

இது இந்திய மக்கள் அனைவரையும் ஐக்கியப்படுத்தியது ஒரு முக்கிய விடயம். ராஜபக்சாக்களும் பொன்சேகாக்களும் 80,000 இற்கும் அதிகமான ஈழத்தமிழர்களை முள்ளிவாய்காலில் படுகொலை செய்த கொடுமையானது தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஆறாத வடுவாய் பதிந்திருந்து எரிமலையாய் ஓங்கி எழும் என்பதில் சந்தேகம் இல்லை.

தோல்வியில் ஒருவன் தனக்குரிய பங்கைக் கண்டறிந்து தன்னைச் சரிசெய்யத் தயாரற்று இருப்பானேயானால் அவன் தன்னை மீண்டும் தோல்விக்கே தயார் படுத்துபவனாகிறான்.

உள்ளும், புறமும் என உண்மையைக் கண்டறிதல் அவசியம். எதிரி வெற்றிபெற்றமைக்கான காரணங்களைப் புறப்பக்கமாகவும் ஒருவர் தான் தோல்வியுற்றதற்கான காரணங்களை உட்பக்கமாகவும் சீர்தூக்கி ஆராயத் தவறினால் வரலாற்றன்னை தோல்விகளையே தலையெழுத்தாக்கிவிடுவாள்.

'வானத்தை நோக்கித் துப்பினால் அந்த எச்சில் துப்பியவனின் முகத்திற்தான் வந்து விழும்' என்ற புத்தபகவானின் வாக்கியத்தை ராஜபக்சாக்களும் பொன்சேகாக்களும் அறிந்திருப்பார்கள் என்பது திண்ணம். ஆனாலும் அதன் ஆழ்ந்த பொருளை அவர்கள் புரிந்திருப்பார்கள் என்று நம்ப இடமில்லை.

நாம் பெறப்போகும் விடுதலை எதிரி எம்மீது புரிந்த கொடுமைக்குத் தக்கதொரு வரலாற்றுத் தண்டனையாய் அமையட்டும். ஒடுக்கும் எதிரியால் புரியமுடியாத அதே வேளை அவரால் எட்டமுடியாத இலட்சிய வானம் எமது.

முன்னோக்கிப் பாய எவ்வளவு வீரம் வேண்டுமோ, அதைவிடவும் அதிகளவான வீரம் பின்வாங்கத் தேவைப்படலாம். மனிதன் பாடங்களைப் பலவாறு கற்கலாம். ஆனால் துன்பத்தைப்போல் சுட்டிப்பாகப் பாடம் புகட்டவல்ல ஆசான் யாருமில்லை. இவ்வகையில் துன்பம் புகட்டும் பாடத்தை தன் தலைமேல் சுமப்பவனை சாணக்கியன் தன் தலைமேல் ஏற்றுகிறான் என்பதை உணர்வோமாக.

**ராஜபக்சாக்களும் பொன்சேகாக்களும் 80, 000-இற்கும் அதிகமான ஈழத்தமிழர்களை முள்ளிவாய்காலில் படுகொலை செய்த கொடுமையானது தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஆறாத வடுவாய் பதிந்திருந்து எரிமலையாய் ஓங்கி எழும் என்பதில் சந்தேகம் இல்லை. தோல்வியில் ஒருவன் தனக்குரிய பங்கைக் கண்டறிந்து தன்னைச் சரிசெய்யத் தயாரற்று இருப்பானேயானால் அவன் தன்னை மீண்டும் தோல்விக்கே தயார் படுத்துபவனாகிறான்.**

(முள்ளிவாய்க்கால் துயரை வெளிக்கொணர வாய்ப்பளித்த சத்தியனுக்கும் நாழிகைக்கும் பொங்கு தமிழுக்கும் நன்றி!)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# என்ன செய்யப் போகிறோம்?

## யாரறிவார் வன்னிப் பெருந்துயரை?

துக்கம் பல வகையில் ஏற்படுவதுண்டு. பிறருடைய கண்ணீரைக் காணும் போது ஏற்படும் துக்கத்தை தாங்கவே முடியாது. அதிலும் பசியால் வேதனைப்படும் துக்கம் சகிக்க முடியாதது. இது, பசி, ஆதரவற்ற நிலை, எதிர்காலத்தைப் பற்றிய எந்தத் தெளிவும் இல்லாத தடுமாற்றம் போன்றவற்றால் ஏற்படும் பரிதவிப்பின் விளைவான துக்கம். இதை எப்படிச் சகித்துக் கொள்ள இயலும்?

'இளமையில் வறுமை கொடுமையிலும் கொடுமை' என்று ஔவையார் பாடியிருக்கிறார். இதை என்னுடைய வாழ்க்கையிலும் அனுபவித்திருக்கிறேன். பசியோடு பள்ளிக்குப் போகும்போது 'ஐயோ என்ரை பிள்ளையைப் பசியோட அனுப்புகிறேனே. ஒரு வேளை சாப்பாட்டைக்கூட போட முடியாத பாவியாக இருக்கிறேனே' என்று அழுத அம்மாவை, அம்மாவின் கண்ணில் வழிந்த அந்தக் கண்ணீரை என்னால் மறக்கவே முடியவில்லை.

அதைப்போல, அதே நிலையில், அதே மாதிரிக் கண்ணீரோடு இருக்கும் சனங்களை வன்னியில் காணுகிறேன். இவர்கள் ஒருவர் இருவரல்ல. போர் தின்று தீர்த்தபின்னர் எதிர்காலத்தைப் பற்றிய எந்தத் தீர்மானங்களும் இல்லாமல், எந்தத் தீர்மானங்களையும் எடுக்கவே முடியாமல், திக்கற்றிருக்கிறார்கள். ஒரு சிறிய உதவிக்காகவே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

போர் முடிந்து விட்டது. வெற்றி தோல்விக் கணக்குகளும் அந்த வெற்றி தோல்விகளின் மதிப்பீடுகளும் ஏறக்குறைய பார்க்கப்பட்டு விட்டது. ஆனால், போரினால் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி இந்த உலகம் பாராமுகமாகவே இருக்கிறது. அரசியல் நலன்களின் முன்னே - அந்த நலன்களுக்கான வியூகங்களின் முன்னே எந்தத் துயரமும் எந்தக் கோரிக்கையும் எந்த நியாயமும் செயலற்றது என்று மீண்டும் உணரப்படும் நிலைதான் தெரிகிறது.

ஆனாலும் இந்த உலகம் இன்னும் கருணையை இழக்கவில்லை. அதிகார வர்க்கத்திடம் கருணைக்கான வாசல்கள், நுண்ணுணர்கொம்புகள் இல்லாதிருக்கலாம். மக்களிடம் அது எப்போதுமுண்டு. அதனால்தான் அவர்கள் மக்களாக இருக்கிறார்கள் என்று ஒரு நண்பர் வேடிக்கையாகச் சொல்வதை இங்கே உண்மையாகவே எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த உலகத்தில் கருணைக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் எண்ணற்றவர்களின் கதைகளையெல்லாம் எப்படிச் சொல்லித் தீர்க்கமுடியும்? ஆனாலும் சொல்லாமலிருக்க முடியுமா?

அது ஒரு சிறிய ஓலைக் குடிசை. ஆனால், அது சரியாக வேயப்படவில்லை. இப்போதைக்கு அது சீர்ப்படுத்தப்படுவதற்கான சாத்தியங்களும் தெரியவில்லை. அதற்கருகில் இன்னொரு பத்தடிச் சதுரத்தில் அமைக்கப்பட்ட தகரத்தாலான கொட்டகை. இந்த இரண்டிலும் தான் இருக்கின்றது எட்டுப் பேர் கொண்ட ஒரு குடும்பம். எட்டுப் பேருக்கு இந்த இடம் போதவே போதாது. சமைக்கவோ படுப்பதற்கோ அங்கே வசதிகளில்லை. ஆனால் அதற்குள்தான் அவர்கள் சமைக்கிறார்கள். படுத்துக் கொள்கிறார்கள். அதற்குள்தான் அந்த வீட்டின் குழந்தைகள் விளையாடுகின்றன. யாரும் அந்த வீட்டிற்குப் போனால் அவர்களை வரவேற்று இருக்க வைப்பதற்கே அங்கே வழியில்லை.

அதைவிட, இந்த எட்டுப்பேரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னாலும், சட்டரீதியாக இவர்கள் மூன்று குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பதிவுகள் அப்படித்தான் உண்டு. அந்த மூன்று குடும்பத்திலும் செத்தவர்கள் போக இப்போது மிஞ்சியவர்கள் ஒரு குடும்பமாக - ஒன்றாக இருக்கிறார்கள். அப்படி இருப்பதே அவர்களுக்கு பாதுகாப்பும் கதியுமாகும். குழந்தைகளைத் தனியே விடமுடியுமா? அதுவும் பத்து வயதுக்குட்பட்ட சிறு பிள்ளைகளை.

இந்தக் குடும்பத்தில் எல்லோருக்கும் ஆதரவாக இப்போதிருப்பது ஒரு முதிய பெண். மூன்று பிள்ளைகளுக்கு இவர் அப்பம்மா. இரண்டு பிள்ளைகளுக்கு இவர் அம்மம்மா. மொத்தமாக அங்கே ஐந்து பேரப் பிள்ளைகள். இதைவிட ஒரு மகள். மற்றும் அந்த மகளுடைய கணவர். அவர் கூலிவேலைக்குப் போகிறார். அவருடைய வருமானத்தில் தான் இந்த எட்டுப்பேரும் தங்கியிருக்கிறார்கள். இதைவிட தாயில்லாமலும் தந்தையில்லாமலும் அந்த முதிய பெண்ணுக்கு இன்னும் பேரப்பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் வேறிடங்களில் இருக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வினருக்கும் இந்திய அரசுக்கும் இடையிலானது என்று எளிமைப் படுத்துவது பரந்த மனப்பான்மை யாளர் என்று தம்மைக் கருதிக் கொள்வோருடைய மனச்சான் றுக்கு நிம்மதியளிக்கும்.

இந்தியாவின் நடுப்பகுதியில் வாழும் பழங்குடி மக்கள் மாவோ காலத்திற்குப் பல நூற்றாண்டுக ளுக்கு முன்பிருந்தே ஆதிக்கவர்க் கத்தினரை எதிர்த்துவந்துள்ளனர் என்பதை மறந்துவிடுவது அந்தப் பரந்த மனப்பான்மையாளர்களுக்கு வசதியாகத்தான் இருக்கும். (அந்தப் பழங்குடிகள் அப்படித் தொடர்ந்து போரிடாமல் இருந்திருப்பின், அவர் களுடைய இனமே இல்லாது ஒழிக் கப்பட்டிருக்கும் என்பது வெளிப் படையான உண்மை). கோ, ஒரே யோன், கோல், சந்தால், முன்டா, கோன்டு ஆகிய இனங்களைச் சேர்ந்த பழங்குடி மக்கள் ஆங்கிலே யர்கள், பெரு நில உடைமையாளர் கள், கந்துவட்டிக்காரர்கள் முதலி யோரைத் தொடர்ந்து எதிர்த்துவந் துள்ளனர். அவர்களுடைய புரட்சி கள் கொடூரமான முறைகளில் ஒடுக் கப்பட்டன. அவர்கள் ஆயிரக்கணக் கில் கொல்லப்பட்டனர். ஆனாலும் அம்மக்களை யாரும் எப்போதும் அடிமைப்படுத்த முடியவில்லை.

இந்தியா ஆங்கிலேயரிடமிருந்து விடுதலைபெற்ற பிறகு மேற்கு வங் கத்தில் நக்சல்பாரி என்னும் சிற் றூரில் நடந்த முதல் மாவோவினப் புரட்சியின் இதயமாகத் திகழ்ந்தவர் கள் பழங்குடி மக்களே. (அந்தப் புரட்சியின் அடிப்படையில்தான் நக் சலியம் என்ற சொல்லாடல் தோன் றிற்று. இன்று அது மாவோவினத் திற்கு மற்றொரு பெயராகச் சுட்டப் படுகிறது.) அப்போதிருந்து நக்சல் அரசியல் பழங்குடி மக்களுடைய போராட்டங்களுடன் மிக நெருக்க மான உறவு கொண்டுள்ளது. ஆகவே, பழங்குடி மக்களும் நக்ச லிய அரசியலுக்கு முழு உரிமை யுள்ளவர்களே.

இந்தத் தொடர் போராட்டங்க ளால் போர்க்குணம்மிக்கவர்களாக உள்ள அந்தப் பழங்குடி மக்களை இந்திய அரசு திட்டமிட்டே தனிமைப் படுத்தித் தாழ்த்தி வைத்துள்ளது. இந்திய மக்கள்நாயக அரசை நெறிப்படுத்தும் இந்திய அரசியல் சாசனம் 1950-ல் நாடாளுமன்றத் தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது பழங்குடி மக்களுக்குத் துயரம் மிகுந்த ஆண்டு. ஏனெனில், ஆங் கிலேயர் ஆட்சியில் இருந்த அரசுக் கொள்கைகளைத் தொடர்ந்து பழங் குடி மக்களின் தாயகப்பகுதிகளுக் குத் தன்னையே உரிமையாளராக ஆக்கிக்கொண்டது இந்திய அரசு. (அரசியல் சட்டத்தை இந்திய அரசு ஏற்றுக்கொண்ட) ஒரே இரவில் பழங்குடி மக்கள் தம் தாயகப் பகுதி யிலேயே வந்தேறிகளாக ஆக்கப் பட்டுவிட்டனர். கான்பொருள்களை நுகர்வதற்கு அவர்கள் வழமையா கப் பெற்றிருந்த உரிமை அவர்க ளுக்கு மறுக்கப்பட்டது. அவர்களு டைய பாரம்பரிய வாழ்முறையே குற்றமுள்ளதெனத் தாழ்த்தப்பட்டு விட்டது. தேர்தல்களில் வாக்களிக் கும் உரிமையை மட்டும் அவர் களுக்குத் தந்துவிட்டு அவர்களு டைய வாழ்வுரிமையையும் மேன் மையையும் பறித்துக் கொண்டது இந்திய அரசு.

இப்படி மாய்மாலத்தால் அவர் களுடைய வாழ் வாதாரங்களைப் பறித்துக்கொண்டு அவர்களை ஏழ் மைப் படுகுழியில் தள்ளிய அரசு அத்துடன் ஓயவில்லை. அவர்களு டைய ஏழ்மையை அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தத் தொடங் கிற்று. புதிய அணை கட்டுதல், நீர்ப் பாசனத் திட்டம் அமைத்தல், சுரங் கம் தோண்டுதல் என எப்போதெல் லாம் பெருமளவிலான மக்களை அவர்களுடைய வாழிடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டியிருந்ததோ அப்போதெல்லாம் 'பழங்குடிகளைத் தற்கால மக்களைப் போலாக்குதல்' அல்லது 'நவீன வளர்ச்சியில் அவர் களுக்கும் பங்களித்தல்' என்பது போன்ற சொல்லாடல்களை இந்திய அரசு பயன்படுத்திற்று. பல கோடி மக்கள் இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்களால் தம் நாட்டினுள்ளேயே ஏதிலிகளாக ஆக்கப்பட்டார்கள். (பெரும் அணைக்கட்டுகளைக் கட்டுவதற்காக மட்டுமே மூன்று கோடிக்கும் மேற்பட்டவர்கள் ஏதி லிகளாக்கப் பட்டனர்.) அவர்களில் பெரும்பாலானோர் பழங்குடி மக் கள்தான். பழங்குடி மக்களுடைய நலனைப் பற்றி அரசு பேசத்தொடங் கினாலே அது கவலையளிப்பதாக உள்ளது.

உள்துறை அமைச்சர் சிதம்ப ரம் அண்மையில் பழங்குடி மக்கள் மீதான தன் கரிசனத்தை வெளிப் படுத்தினார். அவர்கள் (பழங்காலத் தைப் போல) 'அருங்காட்சியகக் கலாச்சாரத்தில்' இருப்பதாகவும் அது தனக்கு உவப்பாக இல்லை யென்றும் அவர் தெரிவித்தார். அமைச்சராவதற்கு முன்னர் சுரங் கத் தொழிலில் ஆதிக்கம் செலுத்தும் பெருநிறுவனங்களின் சார்பில் வாதாடும் வழக்குரைஞராக அவர் பணிபுரிந்தார். அப்போது பழங்குடி மக்களின் நலன் அவருக்கு முதன் மையானதாகத் தெரியவில்லை போலும். ஆகவே அவருடைய அண்மைக்காலக் கரிசனத்தின் அடிப்படை என்ன என்று ஆய்வு செய்வது நல்லதாக இருக்கும்.



இந்தக் காட்டினுள் மோதிக்கொள்ளும் இரு தரப்பினரும் ஒருவரிலிருந்து மற்றவர் மிகவும் வேறுபட்டவர். அவர்க ளுக்கிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகள் மிக அதிகம். வல் லரசாகத் தன்னைப் பாவிக்கும் அரசின் அகம்பாவம், பண வலு, நவீன படைக்கலங்கள், ஊடகங்கள் ஆகியவற் றின் துணையுள்ள மிகப்பெரும் எண்ணிக்கையிலான படையினர் ஒரு பக்கம். மிகவும் கவனமாக ஒழுங்குபடுத் தப்பட்டுள்ளவர்களும் தம் நோக்கை அடைவதில் பேரார் வம் கொண்டவர்களும் வன்முறை மிக்க படைக்கலப் புரட்சியில் தோய்ந்தவர்களுமான மாவோவின் கெரில் லாப் படையினரின் துணை பெற்ற, வழக்கமான படைக் கலங்களை ஏந்திய சாதாரண சிற்றூர்ப்புற மக்கள் மறுபுறம்.

கடந்த சுமார் ஐந்து ஆண்டுக ளில் சத்தீசுகட், சார்க்கன்ட், ஒரிசா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்க ளின் அரசுகள் பெருந்தொழில் நிறு வனங்களுடன் நூற்றுக்கணக் கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. இவைய னைத்தும் கமுக்கமாக வைக்கப் பட்டுள்ளன. இவற்றின் பண மதிப்பு பல்லாயிரம் கோடி ரூபாய்கள். எஃகு உருக்காலைகள், இரும்புத் தொழிற்சாலைகள், மின் உற்பத்தி நிலையங்கள், அலுமினியச் சுத்தி கரிப்பு ஆலைகள், அணைகள், சுரங்கங்கள் முதலியவற்றை நிறு வுதல் தொடர்பானவை இவ்வொப் பந்தங்கள். பழங்குடி மக்களை அப் புறப்படுத்தினால்தான் இவற்றின் மூலம் வருவாய் கிடைக்கும்.

அதனால்தான் இந்தப் போர் நடத்தப்படுகிறது.

தன்னை மக்கள்நாயக நாடாகக் கூறிக்கொள்ளும் ஒரு நாட்டின் அரசு தன் எல்லைக்குள்ளாகவே வெளிப்படையாகப் போர் தொடுக் கையில் அந்தப் போர் எத்தகைய தாக இருக்கும்? அதனை எதிர்ப்ப வர்கள் தாக்குப்பிடிக்க இயலுமா? அது தாக்குப்பிடிக்க வேண்டுமா? மாவோவினர் எனப்படுவோர் யாவர்? காலாவதியாகிப்போன கொள்கைகளைப் பழங்குடி மக்கள் மீது திணித்து வெற்றிவாய்ப்பே இல்லாத புரட்சியைச் செய்யுமாறு அவர்களைத் தூண்டும் வன்முறை யாளர்களாகவும் உலக இயல்பு மறுப்புச் சித்தாந்திகளாகவும் உள்ள வர்களா அவர்கள்? தம் பட்டாங்குக ளிலிருந்து அவர்கள் எத்தகைய படிப்பினைகளை அடைந்துள்ளார் கள்? படைக்கலப் போராட்டத்தில் இயல்பாகவே மக்கள்நாயகத்திற்கு இடமில்லையா? இந்திய அரசுக் கும் மாவோவினருக்கும் இடையி லான போரில் 'சாதாரண' பழங்குடி மக்கள் சிக்குண்டிருப்பதாகக் கூறப் படுவது சரியான கணிப்பா? அப்ப டிக் கூறுவோரும் பிறரும் கருதுவ தைப் போல மாவோவினரும் பழங்குடி மக்களும் முற்றிலும் இரண்டு வேறுபட்ட குழுவினரா? அல்லது, அவ்விரு குழுவினரு டைய நலங்களும் தேவைகளும் ஒத்த இயல்புள்ளவையா? அவர்கள் ஒருவரிடமிருந்து மற்றவர் ஏதே னும் கற்றுக்கொண்டுள்ளனரா? அவர்கள் ஒருவரை மற்றவர் மாற்றியுள்ளனரா?

இவற்றுக்கான விடை அடுத்த வாரம்....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








# வளைகுடா ஷேக்குகளிடம் வதைபடும் தொழிலாளர்கள்!

## சிறப்பு பார்வை !!

சௌதி அரேபியா. மன்னராட்சியிலேயே இன்னும் நீடித்திருக்கும் மத்திய தரைக்கடல் நாடுகளில் ஒன்று. பெரும்பகுதி பாலைவனம். இந்தியா அளவுக்கு பரப்பளவைக் கொண்டிருந்தாலும் மக்கள் தொகையோ ஒப்பீட்டளவில் வெகு சொற்பம். எந்தவித வளங்களும் இல்லாதிருந்த இந்நாடு எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு தலைகீழாய் மாற்றமடைந்தது. அமெரிக்காவின் அராம்கோ நிறுவனம் எண்ணெய்க் கிணறுகளை தன்னுடைய பொறுப்பில் எடுத்துக் கொண்டது. சில மாற்றங்களுடன் இன்றும் அது தொடர்கிறது.

அதுவரை ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த நாடாக மட்டுமே அறியப்பட்ட சௌதி, எண்ணெய் பாயத்தொடங்கியவுடன் உள்கட்டுமானம், வளர்ச்சிப் பணிகள் என்று பெருமளவில் வேலை வாய்ப்புகளை கொண்ட நாடாக வளர்ந்தது. அந்த வகையில் எழுபதுகளின் பிற்பகுதியில் உடலுழைப்புக் கூலிகளாய் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டனர்.

சௌதியின் மக்கள் தொகைக்கு ஈடாக வெளிநாட்டவர்கள் வேலை செய்தாலும் தொழிலாளர்களின் உரிமை என்று எதையும் எதிர்பார்க்கமுடியாது. சொந்த நாட்டு மக்களுக்கே கூட ஜனநாயக உரிமைகள் என்று எதுவுமில்லை. அரசியல் கட்சிகளுக்கு அனுமதியில்லை. கூட்டம் கூடி பேசும் உரிமையையோ, எழுதி வெளியிடும் உரிமையையோ நினைத்துக்கூட பார்க்கமுடியாது. அச்சிடப்படும் நூல்கள் அனைத்தும் தணிக்கைக்குப் பிறகே வெளியிடப்படும். நாளிதழ்கள் தணிக்கை செய்யப்படுவதில்லை என்றாலும் அரசுக்கு எதிராக எதையும் எழுதிவிட முடியாது. மக்களும் அப்படியே பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அரசருக்கோ, அரசுக்கோ எதிராக எதையாவது பேசும் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் கூட சுற்றுமுற்றும் பார்த்து தாழ்ந்த குரலில் பேசுவதே மக்கள் வழக்கம்.

இந்நிலையில் வெளிநாட்டுக் கூலித்தொழிலாளர்கள் என்ன உரிமையை எதிர்பார்த்துவிட முடியும்?

குறைந்தபட்ச ஊதியம் என்று எந்த வரம்பும் இங்கு கிடையாது. நிறுவனத்திற்கேற்றாற்போல், நாட்டிற்கேற்றாற்போல் ஊதிய ஒப்பந்தம் போடப்படும். ஒரே வேலையைச் செய்யும் இருவேறு நிறுவனங்களின் தொழிலாளிகளுக்கு ஒரே விதமான ஊதியமும் வசதிகளும் இருக்குமென எண்ணிவிட முடியாது. ஒரே வேலையைச் செய்யும் ஒரே நிறுவனத்தின் தொழிலாளிகளுக்கு கூட நாட்டைப் பொறுத்து ஊதியம் வேறுபடும்.

துப்பரவு செய்யும் தொழிலாளி ஒருவர் எகிப்தைச் சேர்ந்தவராக இருந்தால் 1200 ரியால் வரை ஊதியம் கிடைக்கும். பிலிப்பைனியாக இருந்தால் 900 ரியால். இந்தியனுக்கு 800 ரியால். பாகிஸ்தானி இந்தோனேசியனுக்கு 600 ரியால். இலங்கை என்றால் 500 ரியால். பங்காளி (வங்கதேசம்) என்றால் 400 ரியால். தற்போது நேபாளத்திலிருந்து 300 முதல் 250 ரியாலுக்கு கூட ஆட்கள் வருகிறார்கள். இது அந்தந்த நிறுவனங்களைப் பொறுத்து சற்று கூடக் குறைய இருக்கும்.

ஊரில் மிச்சமிருக்கும் கொஞ்ச உடமைகளையும் விற்று, கடன் வாங்கி தாலியை அடகுவைத்து பெரிய தொகையை தரகனிடம் தந்துவிட்டு அதைவிடப் பெரிய கனவுடன் வந்திறங்கியதும் முள்ளாய் குத்துவது இந்த ஊதிய வேறுபாடுதான்.

ஊரில் தரப்படும் ஒப்பந்தத்திற்கும் சௌதியில் வந்திறங்கியதும் போடப்படும் ஒப்பந்தத்திற்கும் ஒரு தொடர்பும் இருக்காது. மொத்த ஊதியத்தில் 60 விழுக்காடுதான் அடிப்படை ஊதியமாக இருக்கும். எந் நேரம் அழைத்தாலும் வேலைக்குச் செல்லத் தயாராக இருக்க வேண்டும். எந்த ஊரில் என்றாலும் மறுப்புத் தெரிவிக்க முடியாது. வேறு வெளியாட்களிடமோ வெளி நிறுவனங்களிலோ வேலை செய்யக் கூடாது போன்றவை பொதுவான விதிகள். ஊதிய உயர்வை சட்டபூர்வமாகக் கோரமுடியாது. விண்ணப்பிக்கலாம் அவ்வளவு தான். உபரி வேலை செய்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






எம்மைக்
குறையாண்மை செய்துவைத்த
இறையாண்மை மீதுதான்!

குரங்குகள் கூடிக்
கட்டமுடிந்த பாலத்தை
மனிதர்கள் கூடிக்
கட்ட முடியாதா?

போரின் முடிவென்பது
இனத்தின் முடிவல்ல
எந்த இரவுக்குள்ளும்
பகல் புதைக்கப்படுவதில்லை
எந்த தோல்விக்குள்ளும்
இனம் புதைக்கப்படுவதில்லை
அழிந்தது போலிருக்கு அருகம்புல்
ஆனால்
கண்ணுக்குத் தெரியாத வேர்கள்

அங்கே
சிந்திய துளிகள்
சிவப்பு விதைகள்
ஒவ்வொரு விதையும் ஈழமாய் முளைக்கும்
பீரங்கி ஓசையில்
தொலைந்து போன தூக்கணாங்குருவிகள்
ஈழப்பனைமரத்தில்
என்றேனும் கூடுகட்டும்!

- கவிப்பேரரசு வைரமுத்து



# பௌத்தமும் தமிழும் தமிழர்களும்

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்திற்கு வந்த புத்தமதம், கி.பி.பத்தாம் நூற்றாண்டு வரை உயர்நிலையிலிருந்து, கி.பி.பதிமூன்றாம் நூற்றாண்டுக்குப்பின் முற்றாக மறையத் துவங்கியது.



பௌத்தம் தமிழ் நாட்டுக்கு வந்த காலத்தில் வேறு வடநாட்டு மதங்களும் அங்கு வந்து சேர்ந்தன. அவை ஆருகதம் எனப்படும் சமண மதமும், பிராமண மதம் எனப்படும் வைதீக மதமும், பூரணன் என்பவரை வழிபட்டொழுகும் ஆசீவக மதமும் என்பன.... இந்த நான்கு வட நாட்டு மதங்களும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே தமிழ்நாட்டிற்கு வந்தன.

கி.பி.ஐந்தாவது அல்லது ஆறாவது நூற்றாண்டிற்குப் பின்னர். பௌத்தத்தின் சிறப்புக் குன்றவும், சமணமதம் தலையெடுத்துச் செல்வாக்குப் பெறத் தொடங்கிற்று. ..

பௌத்த மத வீழ்ச்சிக்குப் பிறகு, சமண மதம் செல்வாக்குப் பெற்றது...

பௌத்தக் கோயில்கள் சமணக் கோயில்களாக மாற்றப்பட்டன. பௌத்த பிக்குகள் வசித்த மலைக் குகைகள், சமணக் குகைகளாக மாற்றப்பட்டன.

அகங்களர் என்னும் சமணர் கி.பி.எட்டாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் உள்ள காமக்கோட்டத்தில், பௌத்தருடன் சமயவாதம் செய்து அவரைத் தோற்பித்துச் சிங்கள நாட்டிற்குத் துரத்திவிட்டார் என்னும் செய்தி தமிழக வரலாற்றுப் பதிவிலுள்ளது.

வைதீக மதம் வலிமை பெறத் தொடங்கி ஜைன மதத்தை வீழ்த்தி உன்னத நிலையடையத் தொடங்கிய காலத்தில்தான், பௌத்த மதம் அடியோடு வீழ்ச்சியடைந்து முற்றும் மறைந்துவிட்டது.

## காஞ்சிபுரம் நகரும் புத்த மதமும்:

இந்த ஊர் தொன்று தொட்டுச் சைவ, வைணவ, ஜைன, பௌத்த மதத்தவர்களுக்கு நிலைக்களமாக இருந்துவந்தது. பௌத்தர்கள் பண்டைக் காலத்தில் இங்கு அதிகமாக இருந்தனர். இந்த ஊரில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அரசாண்ட அசோகச் சக்கரவர்த்தியினால் கட்டப்பட்ட ஒரு பௌத்த தூபி இருந்ததாக கி.பி.ஏழாம் நூற்றாண்டில் இந்த நகரத்திற்கு வந்த யுவான் சுவாங் என்னும் சீன யாத்திரிகர் எழுதியிருக்கின்றார். இவர் காஞ்சிபுரத்தில் நூறு பௌத்த பள்ளிகளும், ஆயிரம் பௌத்த பிக்குகளும் இருந்ததாக கூறுகிறார்.

நாளந்தா பல்கலைக் கழகத்தின் தலைமைப் பேராசிரியராக இருந்த ஆசாரிய தரும பாலரும், அபிதம்மாத்த சங்கிரகம் முதலிய நூல்களை இயற்றிய அநுருத்தரும் காஞ்சியில் பிறந்தவர்கள்.

இன்னும் காஞ்சிபுரத்தில் கச்சீஸ்வரர் கோயில் என்று வழங்கும் ஆலயம், பூர்வத்தில் புத்தர் கோயிலெனத் தெரிகிறது. இக் கோயிலின் முன் கோபுரத்தின் அஸ்திவாரக் கல் கட்டிடத்தில் சில புத்த உருவங்கள் இப்போதும் இருக்கின்றன. இன்னும் சில முன்பு இருந்த உருவம் தெரியாமலிருக்குமாறு அழிக்கப்பட்டிருக்கின்றன.

புத்தர் பரிநிர்வாணம் அடையும் நிலையில் கற்சிலையொன்று ஏகாம்பர ஈசுவரர் கோவில் மதிற்சுவரின் கீழே வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றது.

காமாட்சியம்மன் கோயில் ஆதியில் பௌத்தரின் தாராதேவி ஆலயம். இவ்வாலயத்தில் பல புத்த உருவங்கள் இருந்தன. அவைகளில் ஆறடி உயரம் உள்ள நின்றவண்ணமாக அமைக்கப்பட்ட 'சாஸ்தா' (இது புத்தர் உருவம்) என்னும் உருவம் இப்போது சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறது. காமாட்சி அம்மன் குளக்கரையில் இருந்த புத்தச் சிலைகள் இப்போது காணப்படவில்லை.

## அய்யப்பனும் புத்த மதமும்:

இப்போது மலையாள நாட்டில் ஆங்காங்கே 'சாத்தன் காவு' என்றும் 'ஐயப்பன் கோயில்' என்றும் சொல்லப்படும் கோயில்கள் பல உண்டு. இவை முற்காலத்தில் பௌத்த கோயில்களாக இருந்தன என்று சிலர் கருதுகின்றார்கள். 'சாத்தன்' என்பது 'சாஸ்தா' என்பதன் திரிபு. சாஸ்தா என்பதும் புத்தருக்குப் பெயர். காவு அல்லது கா என்பது தோட்டம் எனவே 'சாத்தன் காவு' என்றால் புத்தரது தோட்டமென்பது பொருள்.

## இந்து மதத்தில் பௌத்த மதக் கொள்கைகள்:

தமிழ் நாட்டிலே, ஏன்? இந்தியாவிலேயே பௌத்த மதம் இப்போது மறைந்துவிட்டது. அந்த மதம் மறைந்துவிட்டபோதிலும் அதன் பெரிய கொள்கைகளில் பல நாளிதுவரையில் இந்து மதத்தில் நன்று நிலைபெற்று வருகின்றன. பௌத்த மதக் கொள்கை மட்டுமன்று, பண்டை திராவிடரின் சமயக் கொள்கைகளும், ஜைனரின் மதக் கொள்கைகளும் இப்போதைய இந்து மதத்தில் கலந்து காணப்படுகின்றன.

ஆதிசங்கரின் அத்வைதக் கொள்கையும் 'பிரசன்ன பௌத்தம்' என்று அறியப்பட்டதே. அந்தக் காலத்தில் நடைமுறையிலிருந்த சிறந்த கொள்கைகளை இந்து மதம் தன்னிடத்தில் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இஸ்லாம் மதத்தையும் இந்து மதத்தின் உட்பிரிவுகளில் ஒன்றாகச் சேர்க்க அக்பர் சக்கரவர்த்தி காலத்தில் முயற்சி செய்யப்பட்டு 'அல்லா உபநிஷத்' என்னும் ஒரு புதிய உபநிஷத்து இயற்றப்பட்டது என்பது ஈண்டு நினைவு கூரற்பாலது.

## தமிழ் வரலாற்றில் புத்த மதம்:

தமிழில் உள்ள ஐம்பெரும் காப்பியங்கள் பௌத்தர் ஜைனர் என்னும் இரு சமயத்தாரால் இயற்றப்பட்டவை. மணிமேகலை, குண்டலகேசி என்பன பௌத்தர்களால் இயற்றப்பட்டவை.

வீரசோழியம், சித்தாந்தத்தொகை, திருப்பதிகம் மற்றும் விம்பசாரக் கதை ஆகிய நூற்கள் கிடைக்கப் பெறாவிடினும் அவை பற்றிய குறிப்புகள் மட்டும் உள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பிரான்சின் ஏ9 அதி வேக நெடுஞ்சாலையில் பெருவிபத்து 4 பேர் பலி, 8 பேர் காயம் பல வாகனங்கள் மோதின





பிரான்சின் தென்பகுதியிலுள்ள L'Aude மாவட்ட எல்லையில் A9 நெடுஞ்சாலையில் கடந்த திங்கள் நள்ளிரவு இடம்பெற்ற பாரிய விபத்தில் 2 குழந்தைகள் உட்பட 4 பேர் பலியானதுடன் ஒரு குழந்தை உட்பட 9 பேர் காயமடைந்துள்ளனர்.

ஸ்பெயினிலிருந்து வந்த பாரவூந்து ஒன்றின் டயர் வெடித்ததை அடுத்து அது பயணித்த வழித்தடத்தை விட்டு விலகி மறு வழித்தடத்தில் சடுதியாகத் திரும்பியதால் அந்த வழித்தடத்தில் வந்த வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் ஒரு காரில் பயணித்த 28 வயதான தந்தையும் அவரது 2 வயது ஆண் குழந்தையும் பலியாகினர். அவரது மனைவி படுகாயமடைந்தார்.

மற்றொரு வாகனத்தில் பயணித்த 39 வயதான தந்தையும் அவரது 6 வயதான ஆண் குழந்தையும் பலியாகினர். அவரது மனைவி காயமடைந்தார்.

பிறிதொரு வாகனத்தில் தனது பெற்றோருடன் பயணித்த 6 வயது பெண் குழந்தை ஒன்று படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு உலங்குவானூர்தி மூலம் மொன்பெலியே மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அந்தக் குழந்தையின் பெற்றோரும் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இந்த விபத்தை அடுத்து அந்தப் பிராந்தியத்தில் 200 கிலோமீட்டருக்கு மேற்பட்ட தூரத்துக்கு வாகன நெரிசல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

# கணவரை அடைத்து வைத்த பிரெஞ்சுப் பெண் கைது



15 சதுர மீட்டர் அளவுள்ள அறையில் தனது 80 வயது கணவரை ஒரு ஆண்டாக அடைத்து வைத்திருந்த 45 வயதுப் பெண்ணை போலீஸார் கைது செய்தனர். இந்த செயலுக்கு அப்பெண்ணின் காதலரும் உடந்தையாக இருந்துள்ளார்.

பிரான்சின் அர்ரோ என்ற நகரில்தான் இந்த சம்பவம் நடந்துள்ளது. அந்த நகரைச் சேர்ந்த 80 வயது முதியவருக்கு 45 வயதில் மனைவி உள்ளார். கணவர் மிகவும் வயதானவராக இருந்ததால் அதிருப்தி அடைந்த மனைவி அவரை தனியறையில் பூட்டிவைத்து இரண்டு வேளை உணவையே கொடுத்துவந்ததாக தெரியவந்துள்ளது. இவர் அடைத்து வைத்த அறைக்கு ஜன்னல்களும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

இந்தப் பெரியவரை ஒரு வருடமாக வெளியே காணாத அவரது நண்பர்கள் காவல்துறையினருக்கு தகவல் கொடுத்ததை அடுத்து அவர்கள் விரைந்து வந்து அவரை மீட்டு உடனடியாக மருத்துவமனையில் சேர்த்தனர்.

அந்தப் பெரியவருக்கு கண் சரியாகத் தெரியவில்லை. சரியான சாப்பாடு இல்லாமல் மிகவும் மெலிந்து போய்க் காணப்பட்டார். உடல் ரீதியாக சித்திரவதை செய்யப்பட்டதும் தெரிய வந்துள்ளது.

அவருக்கு நினைவு நன்றாக இருப்பதாகவும், இருப்பினும் இன்னும் துயரத்திலிருந்து அவர் முழுமையாக மீளாததால், யாருடனும் பேசாமல் மௌனமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




## பூப்பந்தாட்டம்

# வேல்ஸ் அணியில் வன் கூஜ் டொங்



நெதர்லாந்தில் பிறந்த இளம் வீரரான ஜேம்ஸ் வன் கூஜ்டொங் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் டெல்லியில் நடைபெறவுள்ள 19-வது பொதுநலவாய நாடுகள் விளையாடும் போட்டியில் வேல்ஸ் நாட்டினைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட உள்ளார்.

2009-ம் ஆண்டு ஐரோப்பிய இளையோர் வெண்கலப்பதக்கக் காரரான கூஜ்டொங்கின் தந்தை நெதர்லாந்து நாட்டவர். ஆனாலும் தாயாரின் பிறந்த நாடான வேல்ஸிற்கு விளையாடுவதையே கூஜ் டொங் தனது விருப்பாக வெளிப் படுத்தியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் போட்டிக்கு இளம் வயதில் தகுதி பெறுவது மிகவும் பெரிய விடயம். அச்சந்தர்ப்பத்தை அளித்த வேல்ஸிற்கு விளையாடுவது பெரும் மகிழ்வுக்குரியது எனக் கூறும் கூஜ்டொங், அனுபவமும் ஆற்றலும் வாய்ந்த வீரர்களுடன் டெல்லி செல்லவுள்ளார். நூறு முறை வேல்சினை பிரதிநிதிப்படுத்தியவரும், பத்து சுற்றுக்களை வெற்றிகொண்டு உலகின் 17-வது நிலை வீரருமான மத்தியு ஹக்ஸ் - 41-வது நிலை வீரரும், இவ்வாண்டு குரோஷிய திறந்த சுற்றினை வெற்றி கொண்டவரும், 2006-ம் ஆண்டு பொதுநலவாய நாடுகள் போட்டியில் காலிறுதி வரை முன்னேறிய ஜொனதன் மோர்கன், மற்றும் மெல்போர்ண் போட்டியின் முதல் எட்டு வீரர்களில் ஒருவருமான ஜேம்ஸ் பிலிப்ஸ் ஆகியோரின் அணியில் இடம்பிடித்துள்ளார்.

## ஸ்பெயின்:

# ETA உறுப்பினர்கள் இருவர் கைது

ஸ்பெயின் பாஸ்க் பிரதேச காவல்துறையினர் கொர்னானி என்ற இடத்தில் மறைந்திருந்த ETA அமைப்பின் உறுப்பினர்கள் இருவரை கடந்த திங்கள் இரவு கைதுசெய்ததாக அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இருவரும் 2003ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ம் திகதி பாஸ்க் பிரதேச காவல்துறை உயரதிகாரி ஒருவரை கொலைசெய்த குற்றம் தொடர்பாக தேடப்பட்டு வந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## சூரியனில் திடீர்.....

டிருக்கிறது.

இந்த வெப்பம் பூமியை தாக்கும் என்று நாசா விஞ்ஞானிகள் கணித்துள்ளனர். இதனால் பூமியை பெரிய அளவில் வெப்பம் தாக்கி ஆபத்து ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இதன் வெப்ப அளவு எந்த அளவுக்கு இருக்கும் என்று கணிக்க முடியவில்லை. சூரியனின் வெப்பம் பூமியை நேரடியாகத் தாக்காமல் பூமிக்கு மேலே உள்ள வாயு மண்டலங்கள் தடுக்கின்றன. இதில் வடிகட்டப்பட்டுத்தான் வெப்பம் பூமிக்கு வருவதுண்டு.

இப்போது வரும் பெரிய வெப்பத்தை வாயு மண்டலங்களால் தடுக்க முடியுமா? அல்லது நேரடியாகத் தாக்கிவிடுமா? என்று தெரியவில்லை. வாயு மண்டலங்களால் வெப்பத்தை தடுக்க முடியாவிட்டால் அது பூமிக்கு பாரிய ஆபத்தை ஏற்படுத்திவிடலாம் என அஞ்சப்படுகிறது.

இல்லையென்றாலும் கூட வேறு வகை பாதிப்புகள் சில ஏற்பட வாய்ப்பு உள்ளன. பூமிக்கு மேல் பகுதியில் வாயுமண்டலத்தைத் தாண்டி ஏராளமான செயற்கைக் கோள்கள் நிறுத்தப்பட்டுள்ளன. தகவல் தொடர்பு உள்ளிட்ட பல் வேறு பணிகளை இந்த செயற்கைக் கோள்கள் செய்து வருகின்றன.


சூரியனில் இருந்து வரும் அதிக வெப்பம் இந்தச் செயற்கைக்கோள்களை தாக்க வாய்ப்பு உள்ளது. இதனால் செயற்கைக்கோள்கள் செயலிழந்து விடும் அபாயமும் உள்ளது.

செயற்கைக்கோள்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் செயலிழந்தால் அது உலகம் முழுவதையும் ஸ்தம்பிக்கச் செய்துவிடும்.

இந்த வெடிப்பால் ஏற்பட்ட சூரிய வெப்பத்தை 'சூரிய சுனாமி' என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். இந்தச் சுனாமி பூமியை தாக்குமா? இல்லையா? என்பது விரைவில் தெரிந்துவிடும்.

முதல்தர காரோட்டம் - F1

# புதிய அணியைக் களமிறக்கக் காத்திருக்கும் வில்நெவ்



1997-ம் ஆண்டு உலகச் சம்பியனான கனடாவின் ஜக்ஸ் வில்நெவ் அடுத்த ஆண்டு புதிய அணியினைக் களமிறக்கும் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

39 வயதுடைய வில்நெவ், 2011-ம் ஆண்டு 13-வது அணியாக 'வில்நெவ்' அணியினைக் களமிறக்கும் பூர்வாங்க வேலைகளில், நிதி மற்றும் தொழில்நுட்ப விடயங்களைப் பூர்த்திசெய்துள்ளார். அணி உரிமையாளராகவோ, ஓட்டுனராகவோ அன்றி இரண்டு நிலைகளிலுமோ களமிறங்குவது பற்றி தற் சமயம் குறிப்பிட விரும்பாத வில்நெவ், ஏனைய விடயங்களை வெளிப்படையாகவே மேற்கொண்டு வருகிறார்.

2006-ம் ஆண்டு றொபேர்ட் குவிகாவுடன் பி.எம்.டபிள்யூ சொவர் அணிக்காக 13 போட்டிகளில் கலந்துகொண்டதோடு, முதல்தரக் காரோட்டத்தில் இருந்து வெளியேறியிருந்தார். அடுத்த ஆண்டுக்கான போட்டிகளில் பங்குபற்றுவதற்கு இன்னும் ஒரு அணிக்கு இடமுண்டு. அது எந்த அணி என்பது இந்த மாத இறுதியிலேயே முடிவாகும். மூன்று அணிகள் ஒரு இடத்திற்காகப் போட்டியில் ஈடுபட்டுள்ளன.

பிரித்தானிய, அமெரிக்க அணியின் முன்னாள் முகாமையாளர் றிக் கோர்னே, வில்நெவ் அணியின் முகாமையாளராக தற்போது செயற்பட்டு வருகின்றார்.

உதைபந்தாட்டம்

# உலகக்கிண்ணம் 2018, 2022

2018, 2022-ஆம் ஆண்டுகளில் உலகக்கிண்ண இறுதிச்சுற்றினை நடாத்தும் நாடுகளிற்கான ஆயுவுகளை சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் ஆரம்பித்து விட்டது.

முதல் முறையாக அடுத்துவரும், இரண்டு உலகக்கிண்ண இறுதிச் சுற்றினை நடாத்தும் நாடுகளிற்கான ஆய்வுகள் ஒரே காலப்பகுதியில் நடைபெறுகின்றது.

சிலி உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் ஹரோல்ட் மயின் நிக்கோல்ஸ் தலைமையிலான ஆய்வுக்குழு, சுற்றுப்போட்டிகளை நடாத்துவதற்கு விண்ணப்பித்துள்ள ஒன்பது நாடுகளிலும் தமது ஆய்வினை மேற்கொள்ளும் பணியினை ஆரம்பித்துவிட்டது. இதன்படி இம்மாதம் 19-ம் திகதி முதல் 22-ம் திகதி வரை ஜப்பானில் ஆய்வுகளை மேற்கொண்டனர். அங்கு 83,000 பார்வையாளர்களைக் கொண்டதாக ஓசாகாவில் அமையவுள்ள புதிய மைதானத்திற்கான இடத்தைதினையும் பார்வையிட்டுள்ளனர். இம்மைதானத்தில்தான ஆரம்ப ஆட்டமும், இறுதி ஆட்டமும் நடாத்தும் திட்டமுண்டு.

22-ம் திகதி முதல் 25-ம் திகதி வரை தென்கொரியாவிலும், 26-ம் திகதி முதல் 29-ம் திகதி வரை அவுஸ்திரேலியாவிலும் தமது பணிகளை மேற்கொள்ளும் ஆய்வுக்குழு, சிறிய இடைவெளிக்குப் பின்னர், நெதர்லாந்து - பெல்ஜியம் இணைந்து நடாத்தவுள்ள இடங்களை, ஓகஸ்ட் 9-ம் திகதி முதல் 12-ம் திகதி வரை பார்வையிடுவர். ஓகஸ்ட் 16 முதல் 19 வரை ரஷ்யாவிலும், 23 முதல் 26 வரை இங்கிலாந்திலும், ஓகஸ்ட் 30 முதல் செப்டெம்பர் 2 வரை ஸ்பெயின் - போத்துக்கல் இணைந்து நடாத்த விண்ணப்பித்துள்ள இடங்களுக்கும் செல்லவுள்ளனர்.

செப்டெம்பர் 6 முதல் 9 வரை ஐக்கிய அமெரிக்காவிலும், 13 முதல் 17வரை கட்டாரிலும் தமது மதிப்பீடுகளை மேற்கொள்ளும் குழு, தனது அறிக்கையினை சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளன உயர்பீடத்திடம் ஒப்படைப்பர். அதனடிப்படையில் 2018, 2022 உலகக்கிண்ண இறுதிச் சுற்றினை யார் நடாத்துவது என்பது பற்றிய முடிவு, எதிர்வரும் டிசம்பர் மாதம் 2-ம் திகதி சூரிச்சில் நடைபெறவுள்ள கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

2018-ம் ஆண்டு சுற்றினை நடாத்துவதில் ஐரோப்பிய நாடுகள் தமது விருப்பினை வெளிப்படுத்தி வருவதால், ஜப்பான், தென்கொரியா, அவுஸ்திரேலியா, கட்டார் என்பன 2022-ஆம் ஆண்டினையே தமது இலக்காகக் கொண்டுள்ளனர்.



இங்கிலாந்து 2018-இல் தமது நாட்டில் இச்சுற்றுப்போட்டி நடைபெறவேண்டும் என விரும்புகிறது. அதற்கு, ஸ்பெயின் - போத்துக்கல், நெதர்லாந்து - பெல்ஜியம் எனபன இடமளிக்குமா எனபது பெரும் கேள்வியே.

2010-ம் ஆண்டு உலகக்கிண்ணத்தில் ஸ்பெயினிற்குச் சார்பாக ரஷ்ய நடுவர்களை கையூட்டல் மூலம் வளைத்துப்போட்டால், ஸ்பெயின் சுற்றினை நடாத்தும் போட்டியில் இருந்து விலகித் தமக்கு ஆதரவாக மாற்றுவதற்கு வழிகோலும் என்ற இங்கிலாந்தின் ரைஸ்மனின் கூற்று பெரும் சூறாவளியை ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடவேண்டியமுக்கிய விடயமாகும்.

துடுப்பெடுத்தாட்டம்

1992-ம் ஆண்டு நடைபெற்ற அவுஸ்திரேலியாவிற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், தனது 20-வது வயதில் சிறீலங்கா அணிக்காகக் களமிறங்கிய முத்தையா முரளிதரன், 17 ஓவர்கள் பந்து வீசி, இரண்டு 'மெய்டன்' ஓவர்கள் உட்பட, 32 ஓட்டங்களைக் கொடுத்து, ஒரு இலக்கை வீழ்த்தி தனது கிரிக்கட் சகாப்தத்தை ஆரம்பித்திருந்தார்.

இவரது டெஸ்ட் ஆட்ட பந்து வீச்சு, கடந்த 22ம் திகதி, இந்திய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 800 இலக்குகளை வீழ்த்தியதோடு முற்றுப்பெற்றுள்ளது.

உலக சுழற்பந்து வீச்சாளர்கள் வரிசையில் அதிக விமர்சனத்திற்கு உள்ளான வீரரான இவரை அவுஸ்திரேலிய நடுவரான டரெல் ஹெயர், முன்னாள் பிரதமர் ஜோன் ஹொவார்ட் ஆகியோரும் விட்டு வைக்கவில்லை. ஆயினும், தனது பந்துவீச்சிலும், தான் சார்ந்த நாட்டிற்கான வெற்றியில் மட்டுமே கவனம் செலுத்தியதால் இன்று 800 இலக்குகளைப் பெற்ற முதல் வீரர் என்ற சரித்திர நாயகனாகவும், தான் சார்ந்த நாட்டின் வாழ்நாள் சாதனை விருதினையும் பெற்றுள்ளார்.

133 டெஸ்ட் ஆட்டங்களில் 230 இனிங்சில் 44,039 பந்துகளை வீசி, 18,180 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 800 இலக்குகளை வீழ்த்தியுள்ளார்.

ஆட்டமொன்றில் 22 முறை 10



அல்லது அதற்கு மேற்பட்ட இலக்குகளையும், இனிங்ஸ் ஒன்றில் 67 முறை 5-ற்கும் அல்லது அதற்கும் மேற்பட்ட இலக்குகளையும் வீழ்த்தியுள்ளார்.

1998-ம் ஆண்டு, ஓவல் மைதானத்தில் இங்கிலாந்திற்கு எதிரான ஆட்டத்தில் 220 ஓட்டங்களுக்கு 16 விக்கட்டுக்களை பெற்றமை அவரது சிறந்த சாதனை என்பதோடு, அன்றைய அவரின் அசுரப் பந்துவீச்சே சிறீலங்கா அணிக்கு இங்கிலாந்து மண்ணில் முதலாவது வெற்றியையும் பெற்றுக்கொடுத்தது.

அத்தோடு 133 டெஸ்ட் ஆட்டங்களில் 164 இனிங்சில் 56 முறை ஆட்டமிழக்காது 1261 ஓட்டங்களைப் பெற்றதோடு, ஒரு அரைச் சதம் உட்படட 67 ஓட்டங்களை அதிகூடி ஓட்டங்களாகப் பெற்றுள்ளார்.




# இந்த நூற்றாண்டின் ஆடம்பர திருமணம் பள்ளி தோழனை மணந்தார் கிளிண்டன் மகள்



அமெரிக்க முன்னாள் அதிபர் பில்கிளிண்டன் மகள் செல்சியாவின் திருமணம் பல மில்லியன் டொலர் செலவில் ஆடம்பரமாக நடந்து முடிந்துள்ளது. முன்னாள் அதிபர் கிளின்டன், தற்போதைய அமெரிக்க வெளியுறவு துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தம்பதியினரின் ஒரே மகள் செல்சியா.

இவர் தனது பள்ளிப்பருவ நண்பன் மெஸ்வின்ஸ்கியை காதலித்து வந்தார். இவர் வங்கி முதலீட்டாளர். தனது பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. நியூயார்க்கில் ஹட்சன்வெலி ரைபக் பிரசேத்தில் 500 ஏக்கர் பரப்பு கொண்ட எஸ்டேட் தேர்வு செய்யப்பட்டு இங்கு திருமணம் நடந்தது.

முக்கிய அழைப்பாளர்களாக 500 பேர் மட்டுமே திருமண நிகழ்ச்சியில் அனுமதிக்கப்பட்டனர். கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ள கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த திருமணத்திற்கென 3 முதல் 5 மில்லியன் டொலர் வரை செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

திருமணம் நடந்த எஸ்டேட் வெளியே லட்சக்கணக்கானவர்கள் கூடி நின்று திருமண தம்பதிகளை வாழ்த்தினர்.

இவரது திருமணத்திற்கென வெள்ளை நிற கவுன் அமெரிக்காவின் பிரபல சினிமா இயக்குனர்கள், மாடலிங்கில் புகழ்ச்சிபெற்ற கலைஞர்கள் கொண்டு தயாரிக்கப்பட்டதாம், இவரது திருமணத்தை ஒன்லைன் வீடியோ மற்றும் புகைப்படம் மூலம் லட்சக்கணக்கானவர்கள் பார்த்து மகிழ்ந்திருக்கின்றனர்.

# ஒபாமாவின் செல்வாக்கு சரிகிறது





அமெரிக்க மக்கள் பெரும்பாலானோர், தற்போதைய அதிபர் ஒபாமாவை விட, முன்னாள் அதிபர் பில் கிளின்டனைதான் விரும்புகின்றனர். அமெரிக்காவின் முன்னணி ஆய்வு நிறுவனம் ஒன்று, அமெரிக்க முன்னாள் அதிபர்கள் மற்றும் தற்போதைய அதிபரில், யாருக்கு செல்வாக்கு அதிகம் உள்ளதென்பது குறித்த ஆய்வை சமீபத்தில் நடத்தியது.

இதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 'முன்னாள் அதிபர் பில் கிளின்டனுக்கு தான், தற்போது அமெரிக்க மக்களிடையே செல்வாக்கு அதிகம் உள்ளது. 61 சதவீதம் பேர், கிளின்டனுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளனர். இந்த வரிசையில், அமெரிக்க மக்களின் ஏகோபித்த வரவேற்புக்கு இடையே கடந்தாண்டு அதிபராக பொறுப்பேற்ற ஒபாமாவுக்கு, 2ம் இடம்தான் கிடைத்துள்ளது. அவருக்கு ஆதரவாக 52 சதவீதம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர். இதன் மூலம், ஒபாமாவின் செல்வாக்கு முதல் முறையாக அமெரிக்க மக்களிடையே வீழ்ச்சியடைந்துள்ளது. அதே நேரத்தில், கடந்த 2008ல் இருந்து நடத்தப்பட்ட ஆய்வுகளில், கிளின்டனுக்கு, தற்போது மீண்டும் செல்வாக்கு பெருகியுள்ளது. இந்த ஆய்வில் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் 3ம் இடம் பிடித்துள்ளார். இவருக்கு ஆதரவாக 45 சதவீதம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# துருக்கி: காவல்துறை குடியிருப்பு மீது PKK தாக்குதல்



துருக்கியின் தென் கிழக்கு பகுதி சீர்ட் மாவட்டத்திலுள்ள EURTH நகரத்திலிருந்த காவல்துறை குடியிருப்பு மீது PKK விடுதலை இயக்கத்தினர் கடந்த திங்கள் இரவு மேற்கொண்ட தாக்குதலில் ஒரு காவலர் கொல்லப்பட்டார். காவல்துறையினர் திருப்பித் தாக்கியதில் 3 PKK உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக துருக்கிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தக் கட்டிடத் தொகுதிக்கான மின் இணைப்பை துண்டித்துவிட்டே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் 5 முதல் எட்டுவரையிலான PKK உறுப்பினர்களே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் இந்தத் தாக்குதல் முறியடிக்கப்பட்டுவிட்டதாகவும் அந்த அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# பிரான்ஸ்: தனக்குப் பிறந்த 8 பச்சிளம் குழந்தைகளை கொலை செய்த தாய்!



தனக்குப் பிறந்த 8 பச்சிளம் குழந்தைகளைக் கொலை செய்து புதைத்த பிரான்ஸை சேர்ந்த மருத்துவ தாதியான தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரான்சின் வடபகுதியிலுள் Villers-Au-Tertre என்ற கிராமத்தில் வசித்துவந்த டொமினிக் கார்டேஸ் என்ற இந்தப் பெண்ணின் வீட்டிலிருந்து 6 பச்சிளம் குழந்தைகளின் எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன.

மிக உடல் பருமன் கொண்ட இந்த 40 வயதுப் பெண்ணுக்கு 20 வயதுக்கு மேற்பட்ட இரண்டு மகள்கள் உள்ளனர்.

முதல் முறையாக இவருக்கு பிரசவம் நடந்தபோது உடல் பருமன் காரணமாக பெரும் வலியையும் வேதனையையும் இவர் அனுபவித்தாராம். இந்த வேதனையால் மனரீதியில் பாதிக்கப்பட்ட அவர் தனக்கு அடுத்துப் பிறந்த 8 குழந்தைகளையும் கொலை செய்து வீட்டு வளாகத்திலேயே புதைத்துள்ளார்.

இந்த வீட்டை சமீபத்தில் இவர் வேறொருவருக்கு விற்றுள்ளார். புதிதாக வாங்கியவர்கள் வீட்டு வளாகத்தில் மரங்களை நடுவதற்கு குழி தோண்டியபோது இரு குழந்தைகளின் எலும்புக் கூடுகள் சிக்கின. இதையடுத்து அவர்கள் காவல் துறையில் புகார் தந்தனர்.

இதைத் தொடர்ந்து காவல் துறையினர் நடத்திய விசாரணையில் டொமிமிக் அடுத்தடுத்து 8 குழந்தைகளை கழுத்தை நெரித்துக் கொலை செய்து புதைத்தது தெரியவந்தது.

இதில் 6 குழந்தைகளின் எலும்புக் கூடுகள் வீட்டுத் தோட்டத்தில் இருந்து மீட்கப்பட்டன. ஏனைய இரண்டு உடல்களை டொமினக் பிளாஸ்டிக் பைகளில் கட்டி வீட்டின் தரைப்பகுதியிள்ள cave எனப்படும் கிட்டங்கியில் புதைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

# பிரித்தானியாவில் வெளிநாட்டவர்கள் குழந்தை பெறும் விகிதம் அதிகரிப்பு

பிரித்தானியாவில் 25 சதவீத குழந்தைகள் வெளிநாட்டுத் தாயார்களுக்கு பிறப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. இது குறித்து, தேசிய புள்ளி விவர அலுவலகம் (ஓ.என்.எஸ்.) ஆய்வு மேற்கொண்டது. அதில், பிரித்தானியாவில் பிறக்கும் 25 சதவீத குழந்தைகள் வெளிநாட்டுத் தாயார்களுக்கு பிறக்கின்றன என்றும், குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான் மற்றும் போலந்து நாட்டு குழந்தைகளே அதிகமென்றும் தெரிய வந்துள்ளது.

இது குறித்து ஓ.என்.எஸ்., வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது, 'லண்டனில் 50 சதவீத குழந்தைகள் வெளிநாட்டுத் தாயார்களுக்கு பிறந்தவை. குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான் மற்றும் போலந்து நாடுகளை சேர்ந்த குழந்தைகளே அதிகம். இது ஆவணங்கள் அடிப்படையில் பெறப்பட்ட தகவல்கள். கடந்த 1998ம் ஆண்டில் 86,456 குழந்தைகள் வெளிநாட்டு தயார்களுக்கு பிறந்தன. அடுத்த 10 ஆண்டுகளில் பிறப்பு விகிதம் 13.6 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பிரித்தானிய பெண்களுக்கு சராசரியாக 1.84 என்ற விகிதத்தில் குழந்தைகள் பிறக்கின்றன. அதே நேரத்தில், வெளிநாட்டு பெண்களுக்கு 2.51 என்று விகிதத்தில் குழந்தைகள் பிறக்கின்றன. இதில் 10ல் ஒரு குழந்தை கொமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்தவை. சில நகரங்களில் உள்நாட்டை விட, வெளிநாட்டு குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன.

இதன் காரணமாக, பிரித்தானியாவின் மக்கள் தொகை வெகுவாக உயர்ந்து வருகிறது. எதிர்வரும் 2029ம் ஆண்டில் இது 7 கோடியை தொடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது'. இவ்வாறு ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

# பாதுகாப்பு அனுமதியின்றி யாழ்ப்பாணம் சென்ற இந்தியர் கைது

சிறீலங்கா பாதுகாப்பு அனுமதியின்றி யாழ்ப்பாணத்திற்கு சென்ற இந்தியர் ஒருவரை ஓமந்தை சோதனை சாவடியில் வைத்துச் சிறீலங்கா இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்

யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்குத் தேவையான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி எதனையும் பெற்றுக்கொள்ளாத இந்த நபர், பெற்றுக்கொள்ளாததற்கும், யாழ்ப்பாணம் செல்வதற்கான தகுந்த காரணத்தையும் தெரிவிக்கவில்லை எனக் கூறப்படுகிறது

கைது செய்யப்பட்ட நபரை இராணுவத்தினர் வவுனியா காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா காவல்துறையினர் இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முனைந்த 85 இலங்கையர்கள் கைது

அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முனைந்த 85 இலங்கையர்களை அந்நாட்டு கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கடல் மார்க்கமாக குறித்த இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முயற்சித்ததாக அந்நாட்டு கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அருகாமையில் சிறிய படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலிய எல்லைக்குள் பிரவேசிக்க இந்தக் குழுவினர் முயற்சித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முயற்சித்த இலங்கையர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

## சிறீலங்கா அரசாங்கம்..

தலைமையில் கொழும்பிலுள்ள ஐ.நா பணியக முன்றலில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் தங்களது கோபத்தினை வெளியிட்டிக்கிறார்கள்.

மனித உரிமைகள் தொடர்பில் சிறிலங்கா மதிப்பளித்துச் செயற்படவில்லை என்றும் இதுபோன்ற ஆர்ப்பாட்டங்களைத் தவிர்ப்பதற்கு அது தவறிவிட்டது என்றும் 2007 ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு சிறிலங்கா அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தியிருக்கிறது.

சீனா, இந்தியா, யப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற சிறிலங்காவின் மீது செல்வாக்குச் செலுத்தும் அதனது நண்பர்கள் சிறிலங்காவினது இதுபோன்ற செயல்களுக்கு எதுவிதமான நடவடிக்கையிலும் இறங்காமல் மௌனமாக இருக்கின்றன என அனான் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற அனைத்துலக சமூகத்தினரின் வேண்டுகைகள் அனைத்தையுமே நிராகரித்திருக்கும் மகிந்த ராஜபக்ச இன நல்லிணக்க முனைப்புக்களில் ஈடுபடுவதாகக் கூறுகிறார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது

# சிறீலங்கா கடவுச்சீட்டை வைத்திருக்கும் புலம் பெயர்ந்த தமிழர்கள் குழந்தைகளுக்கு தனியான கடவுச் சீட்டை பெற்றுக்கொள்வது அவசியம்

புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து இலங்கை செல்பவர்கள் தமது கடவுச் சீட்டுகளில் குழந்தைகளின் படங்களையும் இணைத்துச் செல்வதனால் பாரிய சிக்கல்களை எதிர்கொள்வதாகக் கொழும்புச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றார்.

புலம்பெயாந்த நாடுகளிலுள்ள சிலங்கா தூதரங்களுக்குச் சென்று குழந்தைகளின் படங்களை தமது கடவுச்சீட்டில் இணைத்து சென்றவர்களின் கடவுச் சீட்டுகள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் பறிக்கப்பட்டு அவற்றைப் பெற்றமைக்கான கடிதங்கள் கொடுக்கப்பட்டு இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவதாக கொழும்புச் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கடவுச் சீட்டுக்களை விமான நிலையத்தில் கொடுத்தவர்கள் கொழும்பில் உள்ள குடிவரவு குடியகல்வு அலுவலகத்திற்குச் சென்று தமது குழந்தைகளுக்கான தனியான கடவுச்சீட்டுகளைப் பெற்ற பின்பே நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுகின்றனர்.

எனினும் குழந்தைகளுக்கான கடவுச்சீட்டுகளைப் பெறுவதாயின் அதற்கான ஆவணங்கள் கொடுக்கப்பட வேண்டும். விடுமுறையில் செல்பவர்கள் ஆவணங்களைக் கொண்டு செல்வதில்லை. அதனால் பெருந்தொகைப் பணத்தை லஞ்சமாகக் கொடுத்தே கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதாகப் பல குடும்பங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

சில குடும்பங்கள் 2 அல்லது 3 பிள்ளைகளுக்கு தனியான கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ள தலா 40,000 ரூபா முதல் 50,000 ரூபாவரை கொடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிறீலங்கா குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் சட்டத்தின்படி பிறந்த கைக்குழந்தை தவிர 12 மாதங்களை நிறைவு செய்த அனைத்துக் குழந்தைகளுக்கும் தனியான கடவுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த விதிமுறை நடைமுறைக்கு வந்து ஏறத்தாள 3 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது என்பதை புலம்பெயாந்த நாடுகளில் உள்ள இலங்கையர்கள் தெரிந்திருக்க வேண்டும் என்று கட்டுநாயக்காவிலுள்ள குடிவரவு திணைக்கள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

# கடலில் மூழ்கும் நிலையில் இருந்த இலங்கை அகதிகள் உட்பட 81 பேர் அவுஸ்திரேலியாவில் மீட்பு



கடலில் மூழ்கும் அபாயநிலையில் இருந்த இலங்கை அகதிகள் உள்ளிட்ட 81 பேர் அவுஸ்திரேலியாவின் வடமேற்கு கிறிஸ்மஸ் தீவுக் கடற்பரப்பில் வைத்து கடந்த புதன்கிழமை கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர். அகதிகளுடன் சேர்த்து, அவர்களை அவுஸ்திரேலியாவுக்கு கடத்திய நான்கு இந்தோனேசிய ஆட்கடத்தல்காரர்களும் காப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் தொழிலாளர் கட்சி தெரிவானதைத் தொடர்ந்து அங்கு சென்ற 150 ஆவது படகாக புதனன்று சென்ற படகு பதிவாகியுள்ளது. இதேவேளை கைதுசெய்யப்பட்ட நான்கு ஆட்கடத்தல்காரர்களும் குற்றவாளிகளாகக் கருதப்படமாட்டார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் நான்கு பேரும் ஏனைய அகதிகளுடன் ஆபத்தான நிலையில் இருந்து காப்பாற்றப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் 'காப்பாற்றப்பட்ட கடற்பயணிகள்' எனக் கருதப்படுபவரே தவிர, சட்டவிரோதக் குடியேறிகள் எனக் கருதப்படமாட்டார்கள் என அவுஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்பல் மூழ்கும் நிலையில் இருந்ததாகக் கடற்படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். எனினும் அது மூழ்கிய நிலையில் இருக்கவில்லை என ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே இது ஆட்கடத்தல்காரர்களின் சூழ்ச்சியாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படகில் மீட்கப்பட்ட அகதிகளில் அதிக அளவிலானவர்கள் இலங்கையர்கள் எனவும் பெரும்பாலும் அவர்கள் 18 தொடக்கம் 50 வயதுடைய ஆண்கள் எனவும் கூறப்படுகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட், தமக்கு அகதிகளின் படகுகளை நிறுத்தும் எண்ணம் இல்லை எனவும், அவர்கள் தமது நாடுகளில் இருந்து வெளியேறாமல் தடுப்பதே தமது எண்ணம் எனவும் தெரிவித்துள்ளார்.







La Chapelle லாச்சப்பல்
கோபால் அன் கோ வின்
புதிய அறிமுகம்
NOUVEAU
CARTE SIM
ortel MOBILE
தரம் – நம்பிக்கை
நாணயம் – உத்தரவாதம்
№1
APPELS INTERNATIONAUX
A partir de
0,08 €
par min.
20€ க்கு recharge றொப்பப் செய்தால் 3 மணி நேரம் இலவசம்
பிரான்ஸ் – ஜேர்மனி – நெதர்லாந்து – பெல்ஜியம்
Ortel Mobile இல் இருந்து Ortel Mobile க்கு இலவசம்
SRI LANKA - 0,10 €
Mobile - 0,13 €
INDIA - 0,08 €
Mobile - 0,08 €
GOPAL & CO
72, Rue Louis Blanc
75010 Paris
Tél: 01 46 07 11 10
Tél: 01 46 07 13 03
Tél: 01 46 07 18 65
Fax: 01 46 07 16 95
Port: 06 79 84 79 63
வர்த்தகர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு
நேரடியாக தொடர்பு கொள்ளவும்
www.ortelmobile.fr
(1) Offre et tarifs valables du 4 au 31 mai 2010. Facturation des appels nationaux à la seconde et des appels internationaux à la minute indivisible. Coût de connexion : 0,09 € par appel. Ortel Mobile SAS. RCS Bobigny 513 879 973. Retrouvez tous nos tarifs sur www.ortelmobile.fr
Ne pas jeter sur la voie publique